# அன்னை பூபதி நினைவுநாள் ஏப்ரல்-19



சத்தியத்திற்காகச் சாகத் துணிந்துவிட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும். இதற்கு அன்னை பூபதியின் தியாகம் ஒரு சிறப்பான எடுத்துக்காட்டு. சத்தியத்திற்காக, தர்மத்திற்காக அவர் சாவை அரவணைத்துக் கொண்டார். இந்த ஒப்பற்ற ஈகையால் ஒரு சாதாரண தாயான அவர், அசாதாரண சாதனையைப் புரிந்து தேசியத்தாய் என்ற அந்தஸ்த்திற்கு உயர்ந்தார்.?

அறப்போரிலும் சரி, ஆயுதப் போரிலும் எமது விடுதலைப் போர் உலக சாதனைகளைப் படைத்து வருகின்றது. மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கிறது.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.*




# களத்தில்

(30.03.2000) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (205)




*அன்னையர் திலகம் பூபதி அம்மாவின் நினைவுக் கட்டுரை* → 9


# யாழ்ப்பாணம் நோக்கி புலிகளின் படையணிகள்

## ஆனையிறவுப் பெருந்தளத்தின் ஆயுளுக்கான நாட்கள் எண்ணப்படுகின்றன

**தமிழீழத் தேசியத் தலைவரின் திட்டமிடலுடன், நேரடி நெறிப்படுத்தலுடன் தொடரும் ஓயாத அலைகள் மூன்று தாயகமீட்பு நடவடிக்கையானது, யாழ்ப்பாணத்தை மீட்கும் குறியுடன் உத்வேகம் பெற்று முன்னேறிவருகின்றது.**

**வடமராட்சி கிழக்கில், தாளையடி, மருதங்கேணி, செம்பியன்பற்று இராணுவ முகாம்களை உள்ளடக்கிய முக்கியத்துவம் வாய்ந்த பெரும் சிங்களப்படைத்தளம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டமையானது, யாழ்குடாவை மீட்கும் விடுதலைப் புலிகளின் திட்டத்திற்கு உறுதியான அடித்தளத்தை இட்டுள்ளது.**




நிதானமான அதேவேளை உறுதியான நகர்வுகளுடன், ஆனையிறவுப் பெரும் தளத்தின் கழுத்தை படிப்படியாக இறுக்கி, அதனை மெல்லமெல்ல முற்றுகையின் எல்லைவரை தள்ளிச் சென்ற விடுதலைப் புலிகள், மீண்டும் புயல்வேகத்தில் தாக்க ஆரம்பித்திருக்கின்றனர். ஓயாதஅலைகள் மூன்று தாயகமீட்பு நடவடிக்கையானது தற்போது, ஆனையிறவை முழுமையான முற்றுகைக்குள் கொண்டுவந்துள்ளது. அதன் கண்டிவீதிக்கூடான பிரதான வழங்கல் பாதை, விடுதலைப் புலிகளால் துண்டாடப்பட்டுள்ளது. பிரதான வழங்கல் பாதை துண்டிக்கப்பட்ட நிலையில், ஆனையிறவு இயக்கச்சிப் படைத்தளங்கள், விடுதலைப் புலிகளின் முழுமையான முற்றுகைக்குள் சிக்குண்டுள்ளன. மேலதிக படையினரை அனுப்பவும், காயமடைந்த படையினரை வெளியேற்றவும் விமானப்படை உலங்கு வானூர்திகள் போராடிவருகின்றன.

26ம் திகதி, இரவு ஒன்பது மணிக்கு, பளைப்பகுதியில், பெரும் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருந்த சிங்களப்படையின் ஆட்டிலறித் தளத்தை விடுதலைப் புலிகளின் விசேட கொமாண்டோ அணிகள், முதலில் தாக்கி அழிந்தன. ஆனையிறவை மையமாகக் கொண்ட 54வது டிவிசனின் பலத்திற்கும் பாதுகாப்பிற்குமான, 54-1ம், 54-3ம், 54-4ம், 54-5ம் பிரிகேட்டுக்களின் ஆட்டிலறிகள், அண்மையில்தான் பின்னகர்த்தி பளையில், பெரும் ஆட்டிலறித்தளம் அமைக்கப்பட்டிருந்தது.

பளையில் அமைக்கப்பட்டிருந்த இவ் ஆட்டிலறித்தளமே, ஆனையிறவின் பாதுகாப்புக்கவசமானது. ஆனையிறவிற்கு வரக்கூடிய எந்தவித ஆபத்தையும் முறியடிக்கும் விதமாய், பளையில் இத்தளம் அமைக்கப்பட்டிருந்தது.

இவ் ஆட்டிலறித்தளமே, விடுதலைப் புலிகளின் முதல் இலக்கானது. சிங்களப் படையினரின் பெரும் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்ட முன்னரங்க பாதுகாப்பு நிலைகளை, ஊடறுத்தும் உடைத்தும் கடந்த விடுதலைப் புலிகளின் கொமாண்டோப் படையணி, ஆட்டிலறித்தளத்தை தகர்த்தது. இதன்போது, பலதரப்பட்ட பதினொரு ஆட்டிலறிகள் அழிக்கப்பட்டன. ஆனையிறவுத்தளத்திற்கு வரக்கூடிய ஆபத்துக்காலத்தில் கைகொடுக்கவென, பெருந்தொகை ஆயுதங்கள், இராணுவ உபகரணங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த ஆயுதக்கிடங்கும் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி, எரிந்தழிந்தது.

பிரதான வழங்கல் பாதையை, குறுக்கறுத்து சிங்களப்படையுடன் விடுதலைப் புலிகளின் ஒரு அணி மோதல்களில் ஈடுபட்டிருக்க, மற்றைய அணிகளோ, வடமராட்சி கிழக்கில் சிங்களப்படைநிலைகளை, அழித்தபடி முன்னேறும் நடவடிக்கையில் வேகம் காட்டின.

பன்னிரண்டு மணிநேரமாக, தொடர்ந்த கடும் சமரையடுத்து, சிங்களப்படையின் முக்கியத்துவம் வாய்ந்த, தாளையடி, மருதங்கேணி, செம்பியன்பற்று முகாம்களை உள்ளடக்கிய, பாரிய சிங்களப் படைதளம் விடுதலைப் புலிகளால் 29ம் திகதி பிற்பகல் முழுமையாகக் கைப்பற்றப்பட்டுள்ளது.

தற்போது, கடல்மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் குடாநாட்டுக்குள் அணியணியாகச் செல்ல விடுதலைப் புலிகளுக்கு எதுவித தடைகளும் இல்லை.

கடல் தரை மார்க்கமாக நடத்தப்பட்ட இப்பெரும் தாக்குதல்களும், தொடரும் மோதல்களும், யாழ் மீட்பை கட்டியம் கூறுகின்றன.

ஆனையிறவின் ஆயுளுக்கான நாட்கள் எண்ணப்படுவது தெளிவாகியுள்ளது. அதேவேளை, யாழ் குடா மீட்புக்கான இனிய அறிகுறிகளும் அருகில் தெரிகின்றன.

எப்போது வேண்டுமானாலும், அந்த வெற்றிச் செய்தி கிடைக்கலாம். பெருமைமிகு வீரவரலாறு படைக்கப்படலாம். ■



விடுதலைப் புலிகளின் ஆலோசகர்
திரு. அன்ரன் பாலசிங்கம்

“ தமிழினத்தின் பண்பாட்டுத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் கதவுகளைத்திறப்பதற்கு விடுதலைப்புலிகள் மிக தீர்க்கமான முடிவில் உள்ளவர்கள் எனபதை மட்டும் என்னால் கூறிக்கொள்ள முடியும். ”


செவ்வி → 3


# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# எழுவரை பலிகொடுத்து தப்பிக்கமுயலும் அரசு

வரலாற்றுப் பெருமைமிக்க, ஓயாத அலைகள் மூன்று இராணுவ நடவடிக்கை இன்னும் தன் இலக்கை அடையாளம் காட்டவில்லை. என்றபோதும், தமிழர் தாயக பூமியை மீட்டெடுத்தபடி, தான் வரித்துகொண்டுள்ள இலக்கு நோக்கி முன்னேறிவருகின்றது.

தற்போது, ஆனையிறவைச் சூழ விடுதலைப் புலிகளின் சிறப்புப்படையணிகள், விரவி நிலைகொண்டுள்ளன. ஆனையிறவுப் பெரும் தளத்தின் ஆயுளுக்கான நாட்கள் எண்ணப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

இது இவ்விதம் இருக்க, சிறீலங்கா அரசும் அதன் பாதுகாப்புத் தலைமையும், ஓயாத அலைகள் மூன்றின் ஆரம்பத் தாக்குதல்களில் சிங்கள இராணுவ இயந்திரம் பெற்ற அவமானகரமான, வரலாற்றுத் தோல்விக்கு விசாரணை நடத்தி தீர்ப்பும் வழங்கியிருக்கின்றது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஓயாத அலைகள் மூன்று தாயகமீட்பு நடவடிக்கை, ஐந்தே நாட்களில் வன்னிப் பெருநிலப்பரப்பின் பெரும் பகுதியை விடுவித்துக் கொண்டது. சிறீலங்காப்படையினர் இரண்டரை ஆண்டுகளாக, பெரும் உயிர் விலைகொடுத்து, ஆயுத தளபாடங்களை இழந்து பெற்ற வெற்றிகளை, விடுதலைப் புலிகளின் படையணிகள், ஒரே வாரத்தில் முறியடித்தன. சிங்களப்படை, என்றுமே மறக்க முடியாத வகையில், பெரும் வரலாற்றுத் தோல்வியை வழங்கின. சிங்களத்தின் பத்துக்கும் மேற்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த முகாம்கள் கைப்பற்றப்பட்டன. நூறுக்கும் மேற்பட்ட தமிழரின் சிறப்பும் வனப்பும் வளமும் மிக்க, கிராமங்கள், நகரங்கள், பட்டினங்கள் மீட்கப்பட்டன.

இதற்கு சிறீலங்கா அரசு, இராணுவ விசாரணைக்கமிசன் ஒன்றை அமைத்து விசாரணை நடத்தியது. அதற்கான தீர்ப்பு கடந்த வாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. விடுதலைப் புலிகளிடம் பெற்ற இந்த மோசமான தோல்விக்கு, ஏழு இராணுவ அதிகாரிகள் மீது பழிசுமத்தப்பட்டு, அவர்களுக்கு கட்டாய பணி ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இரண்டு மேஜர் ஜெனரல்கள், ஒரு பிரிகேடியர், இரண்டு கேணல்கள் உட்பட ஏழு இராணுவ அதிகாரிகளே, வன்னித் தோல்விக்காக பலிகொடுக்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றுத் திரும்பி, அப்போது தான் வன்னிப்பிராந்திய கட்டளையதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்த மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவும், வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்.

ஓயாத அலைகள் மூன்றின் முன்னைய தோல்விகளுக்கு எழுவரைப் பொறுப்பாக்கி தப்பிக்க முனையும் சந்திரிகா அரசு, இனி வரப்போகும் தோல்விகளுக்கு யாரைப் பொறுப்பாக்கப்போகின்றது?

இந்தத் தோல்விகள் வெறுமனே கட்டளையதிகாரிகள் சம்பந்தப்பட்ட விடயம் தானா? இல்லை என்பது சந்திரிகா அரசுக்கோ அதன் படைத்துறைக்கோ தெரியாமலிருக்க நியாயமில்லை. ஆனால் தனது ஆட்சியில், தனது தலைமையில் இயங்கும் சிங்களப்படையினரின் தோல்விக்கு தானே பொறுப்பெடுக்க வேண்டிய சந்திரிகா, சிங்கள தேசம் சந்தித்த வரலாற்றுத் தோல்விக்காக சிலரைப் பலிகொடுத்து தான் தப்பிக்க முனைந்திருக்கின்றார்.

உண்மையில், யுத்தத்தின் விரிவும், அதன் வெளிப்பாடாய் பெருகிவரும் அழிவுக்கும் பொறுப்பேற்க வேண்டியவர் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தையுமேயன்றி வேறு யாராக இருக்கமுடியும்.

பெருகிவரும் மனித அழிவுகளுக்கு, யுத்தத்தை திணிப்பவர்களே காரணம்.

யுத்தத்தை தீவு பூராகவும் பரவவைத்து, எங்கும் அச்சமும் பயமும் பீதியும் அழிவும் அவலமுமாக விரியும் போர்ச்சூழலை தோற்றுவித்தவர் சந்திரிகாவன்றி வேறு யார்?

இன்று, சிங்களம் தனது சுதந்திர நாளைக் கூட சுதந்திரமாகக் கொண்டாட முடியவில்லை. சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பமைச்சரும், நாட்டின் தலைவியும் தலைமறைவு வாழ்க்கை வாழ வேண்டிய சூழல் இதற்கு யார் பொறுப்பு?

**“அவலத்தை தந்தவனிடம் அதனைத் திருப்பிக்கொடு”**

இது எமது தேசியத் தலைவரின் மந்திரம். இதுதான் நடந்துகொண்டிருக்கின்றது. சிங்களத்தின் தோல்விகளுக்கு, பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பு ஆசையும் அடக்குமுறைக் கொள்கைகளுமே காரணம். அதனைத் தலைமை தாங்கி நடத்துபவர்களே, இத்துன்பங்களின் தோல்விகளின் பொறுப்பாளிகள். தண்டனைக்குரியோர் அவர்களே. ■

# சண்டை மூலம் சமாதானம் ஆகுமா?

யாழ்ப்பாணத்தில், மார்ச் 25ம் திகதி, சமாதானப் பேரணியொன்று நடாத்தப்பட்டுள்ளது. பல மதங்களையும் சேர்ந்த மதத்தலைவர்கள், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், மாணவர்கள் ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், சதாரண தொழிலாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் இதில் அணிவகுத்துச் சென்றனர். பதாகைகள் தாங்கியும் கோசங்கள் எழுப்பியும் அணிவகுத்துச் சென்ற அம்மக்கள் வலியுறுத்திக்கூறியது.

■ **யுத்தத்தை நிறுத்து!**

■ **மூன்றாந் தரப்புடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பி!**

என்பதைத்தான்.

சிங்களப்படையினரின் ஆக்கிரமிப்புக்குள் இருந்துகொண்டும், அவர்கள் துணிவுடன் திரண்டு சமாதானத்தை வலியுறுத்தியிருக்கின்றனர்.

சந்திரிகா அரசின் இனவெறிக் கொள்கைக்கு எதிராக குரல்கொடுத்த அம்மக்கள். 'சண்டை மூலம் சமாதானம் ஆகுமா? ' என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சிங்கள பௌத்தத் துறவிகளோ சமாதானத்துக்கெதிராக கொடிபிடிக்க, இந்தப் பேரணியில் கலந்துகொண்ட மதத்தலைவர்களோ சமாதானத்தை கடுமையாக வலியுறுத்தினர்.

**“எமது வீடுகள் நொறுக்கப்பட்டு, மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, மாண்புடனும் சுதந்திரத்துடனும் வாழும் உரிமை மறுக்கப்பட்டு, மக்கள் பல துன்பங்களை அனுபவித்துள்ளனர். உண்மையான சமாதானம் ஒவ்வொருவரினது உரிமையிலும் காட்டப்படவேண்டும். அர்த்தமுள்ள பேச்சுக்கள் மூலம் மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்துடன் நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர உதவுங்கள்.”**

இவ்வாறு, யாழ். ஆயர் வண.பிதா தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள், மக்கள் மத்தியில் நின்றவாறு அறைகூவல் விடுத்தார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் பேசும்பேது.

**“பயங்கரமான யுத்தத்தின் மூலம் இந்தமண் அழிந்துகொண்டிருக்கின்றது. எமது இளம் சமுதாயம் மாண்டுகொண்டிருக்கின்றது. சமாதானப் பேச்சுக்கள் மூலம் எம் மத்தியில் நிலவும் துயரங்களைக் களைந்து சந்தோசமான வாழ்க்கையை ஏற்படுத்தவேண்டிய கடமை அரசுக்கு உண்டு. நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து அரசுக்கு அதை உணர்த்தும் காலம் வந்துவிட்டது. எமது மக்களுக்கு நீதியான தீர்வும் நிம்மதியான வாழ்வும் கிடைக்கவேண்டும். தமிழ்மக்களது குரல் இன்று உலகம் முழுதும் ஒலிக்கின்றது.”** என்றார்.

**“இந்தப் பேரணிமூலம் இன்று, எமது உணர்வுகளை வெளிப்படுத்த முடிந்தது. நாங்கள் சொந்த மண்ணில் நிம்மதியாக வாழமுடியவில்லை. எமக்கு சமாதானம் வேண்டும். போர் வேண்டாம்.”** இவ்வாறு தெரிவித்தார், இந்து மதகுருமார் ஒன்றியத் தலைவர் பிரம்மஸ்ரீ மகேஸ்வரக்குருக்கள்.

நமது மக்களும் மதத்தலைவர்களும் வலியுறுத்துவது...

**நீதியான தீர்வும் நிம்மதியான வாழ்வும்.** ■


| AUSTRALIA | CANADA | DENMARK | FRANCE | GERMANY | ITALY |
|---|---|---|---|---|---|
| TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | TCC<br>341 Rue Des Pyrenees,<br>75020 Paris. | TCC<br>Postfach 101613,<br>46016 Oberhaousen. | TCC<br>Via Paolo Balsamo-11<br>90100 Palermo. |
| **NETHERLANDS** | **NORWAY** | **SWITZERLAND** | **SWEDEN** | **UNITED KINGDOM** | **U.S.A** |
| TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |

# நெருக்கடியைத் தவிர்த்து இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் அவசியம்!

**விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம்**



**நோர்வே ஒஸ்லோவில் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை பெற்று, ஓய்வெடுத்துவரும் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள், லண்டனில் இருந்து வெளிவரும் தமிழ்கார்டியன் பத்திரிகைக்கு அண்மையில் செவ்வி வழங்கியிருந்தார். வன்னியில் இருந்து பிரித்தானியா வந்த திரு. பாலசிங்கம் அவர்கள், முதல்முதலாக வழங்கிய பத்திரிகைச் செவ்வியிது.**

**நோர்வே அரசின் சமாதான முயற்சி, விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு, சந்திரிகா அரசின் சமாதான முன்னெடுப்புக் குறித்த விடுதலைப் புலிகளின் பார்வை என்பன குறித்து வினவப்பட்ட பலதரப்பட்ட கேள்விகளுக்கு, விரிவாக விளக்கமளித்தார். இவர் வழங்கிய செவ்வியை, களத்தில் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்..**

**●கே– தங்களுக்கு சிகிச்சை அளிக்க, நோர்வே அரசுக்கு தான் அனுமதி வழங்கியதாகக் கூறிய அரச தலைவர் சந்திரிகாவின் கூற்றுப் பற்றி தங்கள் கருத்து என்ன?**

■ப- இப்படி ஒரு பொய்யும் பொறுப்பற்றதுமான செய்தி ஒன்றை ஏன் வெளியிட்டார் என்று எனக்கு விளங்கவில்லை. ஒஸ்லோவில் இருக்கும்பொழுது Far Eastern Economic Review என்னும் பத்திரிகையில் பார்த்தேன். நோர்வே அதிகாரிகளுக்கும் அறிவித்து எனது அதிருப்தியை தெரிவித்தேன். அவர்கள் அப்படி ஏதும் அனுமதி கோரியிராததினால், அவர்களுக்கும் அது எரிச்சலை ஊட்டியது. எனவே வெளிவிவகார அமைச்சின் அதிகாரி அதனைக் கண்டித்து ஒரு அறிக்கை வெளியிட்டார். சிறுநீரக மாற்றுச் சிகிச்சையில் முன்னணியில் நிற்கும் நாடானதினால், மனிதாபிமான அடிப்படையில் எனக்கு உதவ முன்வந்தனர். இவ்விடயத்தில் நோர்வே தன் தீர்மானத்தை எடுத்த பின் சமாதானப் பேச்சுவார்த்தையில், நான் விடுதலைப் புலிகள் சார்பான முக்கியமான பேச்சாளர் ஆனதால் இவ்விடயம்பற்றி சந்திரிகாவுக்கும் அறிவித்தது.

**●கே– நோர்வேயில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் குறித்து தங்களின் கருத்து என்ன?**

■ப- நோர்வேயின் மத்தியத்துவ நிலைப்பாட்டிலும் கொள்கையிலும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லையென புதிய நோர்வே அரசு உறுதியளித்துள்ளது. புதிய நோர்வே வெளிவிவகார அமைச்சரை நான் விரைவில் சந்திக்கவுள்ளேன்.

**●கே– பௌத்த பீடாதிபதிகளின் எதிர்ப்புப்பற்றி என்ன குறிப்பிட விரும்புகிறீர்கள்?**

■ப- தமிழரின் பிரச்சனையைத் தீர்க்க சிங்கள ஆட்சிபீடங்கள் முயற்சிகள் எடுக்கும்பொழுது பௌத்த மகாசங்கத்திலிருந்து எதிர்ப்புக்கிளம்புவது சிங்கள அரசியல் வரலாற்றில் ஒரு விபரீதமான புதிய நிகழ்வு அல்ல. பௌத்த குருமாரின் எதிர்ப்பால் ஒப்பந்தங்களும் உடன்பாடுகளும் கிழித்தெறியப்பட்ட வரலாற்றை எமது மக்கள் நன்கறிவர். இந்தக் கசப்பான வரலாற்று அனுபவம் காரணமாகவே பௌத்த பீடத்தின் கடும் எதிர்ப்பை அறிந்து தமிழ் மக்கள் மனமுடைந்திருக்கிறார்கள். பௌத்த மகாநாயக்க தேரர்களினதும் மற்றும் பௌத்த தீவிரவாத இயக்கங்களினதும் எதிர்ப்பு சமாதான முயற்சிக்கு பெரும் இடையூறாக அமையும். இன் நிலைப்பாட்டின் ஆபத்தான முரண்பாடு என்னவென்றால் இரக்கமே உருவான புத்தரின் போதனைக்கு எதிராக வன்முறை யுத்தம் இரத்த வெள்ளத்தால்தான் தமிழ் இனப்பாகுபாட்டு பயங்கரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்று கங்கணம் கட்டுவதுதான் சிங்கள பௌத்த பிக்குகளின் இந்த இனத்துவேஷமும் யுத்த வெறியும்தான் அன்பு, இரக்கம் பௌத்த சிந்தாந்தத்தில் வேரூன்றிய ஞானிகளை அதிரவைக்கின்றது.

**●கே– தென்னிலங்கையில் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருந்த போதும் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு நாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி குமாரதுங்கா அறிவித்து வருகிறார். இந்த நிலைப்பாட்டிற்கு காரணமென்ன? இராணுவ பலவீனம் காரணமாக இருக்குமா?**

■ப- வன்னியிலும் ஆனையிறவுப் பிரதேசத்திலும் எதிர்கொண்ட பாரிய இராணுவத் தோல்விகளும், வருடங்களாக இரத்தம் சிந்திப் போராடி ஆக்கிரமித்த பெரு நிலப்பரப்புகளை இழக்க நேர்ந்ததும், இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்ற உண்மையை சந்திரிகாவிற்கு உணர்த்தியிருக்கலாம். அத்தோடு தமிழர் தாயகம் மீது படையெடுத்து நிகழ்த்திய அனர்த்தங்களால் தமிழ் மக்களின் வெறுப்பிற்கும் சந்திரிகா ஆளாகியிருக்கிறார். அத்தோடு சிறீலங்காவின் ஆயுதப் படைகளும் சிக்கலான பிரச்சனைகளை எதிர்கொண்டு நிற்கின்றன. இருபது வருடங்களுக்கு மேலாக முடிவின்றித் தொடரும் போரில் பங்குபற்றி, மாறி மாறி தொடர்ச்சியாக நிகழ்ந்த சமர்களிலும் சண்டைகளிலும் இழப்புக்களைச் சந்தித்து, சோர்ந்து, களைத்து, ஆட்டம் கண்டு நிற்கும் சிங்கள இராணுவத்தின் தாக்குதல் வலு பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஆட்பலமும் குறைந்து மனோபலமும் உடைந்து நிற்கிறது. பொறுப்பற்ற அரசியல் வாதிகளின் ஆதிக்கக் கனவை நிறைவு படுத்துவதென்பது இந்த வலுக்குன்றிய இராணுவத்தால் இனி முடியாத காரியம். இந்த யதார்த்தத்தைத்தான் சந்திரிகா இப்பொழுது சந்தித்து நிற்கிறார். இதன் அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிகா இராணுவப் பாதையைக் கைவிட்டு சமாதான வழியில் தமிழரின் தேசியப் பிரச்சனைக்கு தீர்வுகாண முயற்சிப்பார் எனக் கருத முடியாது. அவருக்கு இப்பொழுது தேவைப்படுவது காலம். இராணுவ இயந்திரத்தை மீளமைப்புச் செய்து நவீன மயப்படுத்தி இன்னுமொரு பெரும் போருக்குத் தயார் செய்வதற்கு சந்திரிகாவிற்கு காலம் தேவைப்படுகிறது. அவர் ஏற்கனவே இராணுவச் செலவீனத்திற்கு வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தொகையான நிதியை ஒதுக்கியிருக்கிறார். அத்தோடு அதி நவீன, தொழில்நுட்பம் வாய்ந்த அழிவு ஆயுதங்களை வாங்கிக் குவித்து வருகின்றார். அவரது இராணுவத் தளபதிகளும் தென்னிலங்கையில் வீடு வீடாகச் சென்று படைக்கு ஆட்திரட்டி வருகிறார்கள். ஆகவே, தற்போது கொழும்பில் அரங்கேறியுள்ள சமாதான நாடகமும், பேச்சு வார்த்தைக்கு புலிகளுக்கு விடுக்கப்படும் அழைப்புகளும் ஒரு அரசியல் ஏமாற்றுவித்தை என்றே நாம் கருதவேண்டி இருக்கின்றது. இராணுவத்தை நவீன மயப்படுத்த தேவையான கால இடைவெளியை நிரப்ப நடைபெறும் ஒரு அரசியல் சூத்தாக இருக்கலாம்.

**●கே– இன்னும் ஒரு ஆறுமாத இடைவெளிக்குள் தமிழரின் இனப் பிரச்சனைக்கு தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி குமாரதுங்கா மிகவும் உறுதியுடனும் நம்பிக்கையுடனும் கூறிவருகிறார். இந்தக் கால வரம்பு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

■ப- யுத்த நடவடிக்கைகளுக்கு நிகழ்ச்சி நிரல் போடும் அவருடைய மாமனார் போல சந்திரிகாவும் காலவரை அறிவிப்பதில் கை தேர்ந்தவர். ஆசியாவிலேயே மிகவும் கடினமானதும், சிக்கலானதுமான தமிழரின் தேசியப் பிரச்சனையை தீர்ப்பதற்கு குறுகிய கால வரம்புகளை நிர்ணயிக்க முடியாது.தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆழத்தையும், அகலத்தையும் சிக்கலான வரலாற்றையும் மட்டுமன்றி, இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் சுதந்திர இயக்கத்தின் இலட்சியப்பற்றையும் சந்திரிகா நன்கு புரிந்து கொள்ளவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் எந்தவித காலக்கெடுக்களையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. காலக்கெடுக்களை நிர்ணயிப்பதே ஒரு நிபந்தனையை விதிப்பதாக முடியும், இந்தக் கால வரம்பிற்குள் விடுதலைப் புலிகளையும் உட்படுத்தலாம் என சந்திரிகா கருதுவாரானால் அவருக்கு ஏமாற்றமே காத்துநிற்கும். ஏனென்றால் நாம் அவரது கால அட்டவணைத் திட்டத்திற்குள் மாட்டிக்கொள்ளப் போவதில்லை. பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னராக தனது அரசியலமைப்புத் திருத்தங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டுமென்ற நிர்ப்பந்தம் சந்திரிகாவுக்கு இருக்கலாம். பாராளுமன்ற ஆசனங்களில் அமர்ந்திருப்பவர்களுக்கும் அந்த நிர்ப்பந்தம் இருக்கலாம். ஆனால் விடுதலைப் புலிகள் ஒரு சுதந்திர இயக்கம், பாராளுமன்றத்திற்கு புறம்பான ஒரு விடுதலை இயக்கம். சந்திரிகாவின் காலவரம்பிற்குள் செயற்பட வேண்டுமென்ற அரசியல் நிர்ப்பந்தங்கள் எதுவும் எமக்கில்லை.

**●கே– தமிழரின் இனப் பிரச்சனையை தீர்ப்பது குறித்து சந்திரிகா அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்று கூடி கலந்தாலோசித்துவருவது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

■ப- அதுவொரு நல்ல முயற்சி. தமிழரின் இனப் பிரச்சனையை தீர்ப்பதற்கு முட்டுக்கட்டைகளாக நின்று, பிரச்சனை இறுபடுவதற்கும் தீவிரமடைந்திருப்பதற்கும் காரணமான வரலாற்றுக் குற்றவாளிகளான இந்த இரு சிங்களக் கட்சிகளும் ஒன்று கூடிக்கதைப்பது ஆக்கபூர்வமான விடயம். தமிழரைப் பொறுத்தவரை தென்னிலங்கைச் சிங்களக் கட்சிகள் ஒன்று கூடிக் கலந்தாலோசிப்பது முக்கியமல்ல. இந்த சர்வகட்சி கூட்டுமுயற்சிகளும், இணக்கப்பாடுகளும் திம்புக் கோட்பாடுகளாக பிரகடனப்படுத்தப்பட்ட தமிழரின் தேசிய அபிலாசைகளை நிறைவுசெய்யும் ஒரு தீர்வுத் திட்டத்தை உருவாக்குமா என்பதுதான் முக்கியம். சந்திரிகாவின் சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் சாராம்சத்தில் சிங்களப் பேரினவாதக் கட்சிகள். இக் கட்சிகளது அரசியல் நலன்கள் சிங்களத் தொகுதிகளில் வேரூன்றிக் கிடக்கின்றன. இவ்விரு கட்சிகளுமாக இணைந்து பெரும்பான்மைச் சிங்களவரின் நலனைப் பேணும் வகையில், தமிழருக்கான அரசியல் அதிகாரத்தை மேலும் வெட்டிக் குறைத்து, தமிழரின் தாயகத்தை துண்டாடி, ஒரு இறுக்கமான ஒற்றையாட்சியை உருவாக்கினாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்படியான ஒரு புதிய அரசியற் சட்டம் உருவாக்கப்படுமானால் சிங்களக் கட்சிகள் ஒன்றுபட்டதில் தமிழர்களுக்கு எவ்வித பலனும் ஏற்படப்போவதில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்த, முட்டுக்கட்டைகளை நீக்குவது, சுமூகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கி படைகளை வாபஸ் பெறுவது, என்று விடுதலைப் புலிகளின் நிபந்தனைகளை முன் வைத்தனர். ஆனால் தலைவி குமாரதுங்க அண்மையில் அளித்த பத்திரிகைச் செய்தியில் முட்டுக்கட்டைகளை நீக்குவது பேச்சுவார்த்தை சித்தியடைந்தால் மட்டுமே, படைகளை வாபஸ் வாங்குவது அரசியல் தீர்வு கண்ட பின்பே என்றும் கூறி விடுதலைப் புலிகள் கோரிக்கையை நிராகரித்துள்ளார்.

**●கே– இது விடுதலைப் புலிகள் கண்ணோட்டத்தில் சாத்தியமானதா? முட்டுக்கட்டைகளை நீக்குவது என்றால் எதனை குறிக்கிறீர்கள்?**

■ப- முட்டுக்கட்டை நீக்குதல் என்று நாம் குறிப்பிட்டது கொழும்பில் பிழையாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாங்கள்

தொடர்ச்சி 4ம் பக்கம்

***திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களின் செவ்வி.***

3ம் பக்கத் தொடர்ச்சி

முன்வைத்த முட்டுக்கட்டைகளை நீக்குதல் என்ற பதத்தின் ஆழ அகலத்தை அறியத்தவறிட்ட தலைவி குமாரதுங்க படைகளை வாபஸ் பெறுதல் என்ற கோரிக்கையை தனிமைப்படுத்தி முக்கியத்துவம் கொடுத்துள்ளார். நாங்கள் இவ்விடயம்பற்றி நோர்வே அதிகாரிகளுடன் விரிவாக விவாதித்துள்ளோம். ஆனால் இவ் விடயம் சிறீலங்கா அரசுக்கு எவ்வளவுக்கு விளக்கப்பட்டுள்ளதோ தெரியாது. ஐக்கிய தேசியக் கட்சி அரசும் சந்திரிகாவின் அரசும் கடந்த பத்துவருட காலமாக எமது மக்கள் மீது திணித்துவந்துள்ள தடைகளும், கட்டுப்பாடுகளும் பாரிய இழப்பு பிரச்சனைகளை ஏற்படுத்தியதோடு, தமிழர்களது சமூக பொருளாதார கலாச்சார வாழ்வையும் ஆழமாக சீர்குலைத்திருப்பதாக குற்றம் சாட்டினார். அத்துடன் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் நோக்குடன் கட்டவிழ்த்து விடப்பட்ட போர் நடவடிக்கைகள் தமிழ் மக்களின் வாழ்க்கைப் பிரச்சனையை மேலும் மோசமாக்கி பத்து இலட்சம் தமிழர்களை அவர்களது சொந்த மண்ணிலேயே ஏதிலிகளாக்கியுள்ளன. தமிழ் மக்கள் மீது ஒரு கூட்டுத்தண்டனையாக விதிக்கப்பட்டிருக்கும் இந்த ஒடுக்கு முறைகளும் நெருக்குவாரங்களும் உடன் நீக்கப்பட வேண்டும். தமிழ் மக்களும் அதனையே விரும்புகிறார்கள். பொதிகளிலும், பெட்டகங்களிலும், ஒப்பந்தங்களிலும், அரசியல் அமைப்புச் சட்ட திருத்தங்களிலும் அவர்களுக்கு பெரிதாக அக்கறையில்லை. இந்தச் சட்டங்கள் அரசியல் யாப்பின் கட்டுக்கோப்பை மாற்றியமைக்குமே தவிர தமிழரின் நாளாந்த வாழ்க்கையின் கொடூரமான யதார்த்தத்தை பிரதி பலிக்கவில்லை. எமது மக்கள் தமக்கு உரித்தான உரிமைகளோடும், சுதந்திரங்களோடும், கௌரவமாக சாதாரண மனிதப் பிறவிகளாக வாழ விரும்புகிறார்கள். அவர்கள் தமது சொந்த வீடுகளில் சுதந்திரக் காற்றை சுவாசிக்க விரும்புகிறார்கள். தமது சொந்த மண்ணில் சுதந்திரமாக நடமாட விரும்புகிறார்கள். தமது சொந்த நிலங்களில் விவசாயம் செய்தும், சொந்தக் கடல்களில் மீன்பிடித்தும், பயமின்றி, தடைகளின்றி, நெருக்குவாரங்களின்றி கௌரவமாக உழைத்து வாழ விரும்புகிறார்கள். தமிழர்கள் மீது இறுக்கப்பட்டுள்ள ஒடுக்குமுறைச் சூழ்நிலையை நீக்கி சமாதானத்திற்கும் பரஸ்பர நல்லெண்ணத்திற்குமான ஒரு இயல்பு நிலையைத் தோற்றுவிக்க அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒன்று சேர்ந்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்இந்த ஒடுக்குமுறையான தடைகள் நீக்கப்படுவது அரசாங்கத்தின் போர்க் கொள்கையோடு பின்னப்பட்டிருப்பதால் ஒரு உருப்படியான போர் நிறுத்தத்திற்கும் விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர்.

**■கே– பேச்சுவார்த்தைகளுக்கு முன்னராக போரை நிறுத்தவோ, தமிழ்ப் பகுதிகளிலிருந்து சிங்களப் படைகளை வெளியேற்றவோ ஜனாதிபதி சந்திரிகா மறுத்துள்ளார் என்றும், பேச்சுவார்த்தை வெற்றியளித்து இனப் பிரச்சனைக்கு தீர்வு ஏற்பட்டாலன்றி படைகள் வெளியேற்றப்பட மாட்டாதென்பதே அவரது நிலைப்பாடு இது பற்றி உங்களது கருத்து என்ன?**

●ப- தொடரும் போர்ச்சூழலில் சமாதானப் பேச்சுக்கள் நடத்துவதை புலிகள் விரும்பவில்லை. ஒருபுறம் போரை நடத்திக் கொண்டு மறுபுறம் பேச்சை நடத்துவதும், ஒருவரை ஒருவர் கொன்று அழித்துக் கொண்டு சமாதானம் பேசுவதும் மிகவும் அபத்தமான, முட்டாள்த்தனமான காரியம். அதனால்தான் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னராக போர்ச் சூழலை நீக்கிவிட வேண்டுமென நாங்கள் வற்புறுத்துகிறோம். சமாதான பேச்சுவார்த்தைக்கு முன்னராக வடகிழக்கிலிருந்து சிங்கள ஆயுதப்படைகள் விலக்கப்பட வேண்டும் என்பதை பேச்சுவார்த்தைக்கு ஒரு நிபந்தனையாக நாம் வலியுறுத்தவில்லை. ஆனால் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு, போர் மீறல்களை மேற்பார்வை செய்ய ஒரு கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட்டதன் பின்னராக படைகள் முகாம்களுக்குள் அனுப்பப்பட வேண்டும். ஒரு இறுதித் தீர்வு காணும்வரை அரசாங்கம் தனது படைகளை தமிழ் மண்ணில் வைத்திருப்பதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் போர் நிறுத்தத்தின் பின்னர் மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து, பொது நிலைகளிலிருந்து, வீதிகளின் முடுக்கு மூலைகளிலிருந்து, பட்டினம் நகரப் புறங்களிலிருந்து ஆயுதம் தரித்த படைகள் விலக்கப்பட்டு முகாம்களுக்குள் நிறுத்தப்படவேண்டும். போர் நிறுத்தத்தின் பின்னர் சிங்களப் படைகள் குடியிருப்புப் பிரதேசங்களை ஆக்கிரமித்து நிற்பதை நாம் விரும்பவில்லை. இந்த ஆக்கிரமிப்பு நிலை தொடர்ந்தால் எமது பட்டினங்களும் குடியிருப்புக்களும் தொடர்ந்தும் திறந்தவெளிச் சிறைச்சாலைகளாக இருக்க வேண்டியிருக்கும். தமிழரின் சமூக வாழ்விலும் தொடர்ந்தும் பீதியும் பதட்ட நிலையும் தொடரும். போர் நிறுத்தம் அர்த்தமற்றதாகிவிடும். ஆக்கிரமிப்பு நெருக்கடி தொடரும். அதனால்தான் போர் நிறுத்தத்தின் பின்னர் சிங்கள ஆயுதப் படைகள் முகாம்களுக்குள் அனுப்பப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்

**■கே- நெருக்கடியைத் தணித்து இயல்பு நிலையை ஏற்படுத்தும் விடுதலைப் புலிகளின் இந்த யோசனையை சிறீலங்கா அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

●ப- அது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் சமாதானத்தை உருவாக்குவதில் சந்திரிகா அரசு உண்மையான அக்கறை கொண்டிருந்தால் எமது யோசனையைக் கவனமாகப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களை அடிபணிய வைத்து, புலிகளை பேச்சுக்கு நிர்ப்பந்திக்கும் நோக்குடனேயே சிங்கள அரசாங்கம் இராணுவ அடக்குமுறையையும் பொருளாதார ஒடுக்குமுறையையும் எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. இந்தக் கொள்கை அடிப்படையிலேயே தவறானது. இது சமாதானப் பாதைக்கு இட்டுச் செல்லப் போவதில்லை- பல்வேறு தடைகளாகவும் கட்டுப்பாடுகளாகவும் திணிக்கப்பட்டிருக்கும் சமூகப்பொருளாதார ஒடுக்குமுறையை சந்திரிகா அரசு அகற்றிவிட்டால் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக உள்ளது.

**■கே– இறுதியாக களநிலைமை எவ்வாறு உள்ளது?**

●ப- யாழ் நுழைவாயிலில் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் அதிர்ச்சி அடைந்த படையினர், எதிர்த்தாக்குதலுக்கு பெருந்தொகையான படையினரை குவித்துக் கொண்டு இருக்கிறார்கள். எந்நேரமும் பூகம்பம் வெடிக்கலாம், விளைவுபற்றி முன்னறிவிப்பது கடினம். ஒன்று மட்டும் நான் சொல்லுவேன் விடுதலைப் புலிகள் யாழ் நுளை வாயிலை திறந்து தமிழ்த் தேசிய கலாச்சார தலைநகரை அடைய கங்கணம்கட்டி நிற்கின்றனர். அவர்கள் யுத்ததந்திரத்தின் முன்னால் இராணுவ சக்தி

# டாட்டினெல்ஸ் நீரிணை பாதை திறப்பும்,

## *நேசநாடுகளின் கலிப்பொலி குடாநாட்டுக் கைப்பற்றுகையும்* (1915-1916)

*சென்ற இதழ் தொடர்ச்சி*


இலண்டனில் கிச்சனர், சேர்ச்சில் மற்றும் பிரித்தானிய அமைச்சரவை உறுப்பினர்கள் கிழக்கில் தந்திரோபாய வெற்றியைப் பெறவேண்டுமென்பதில் உறுதியாக இருந்தனர். அது நவீனயுகத்தின் முதலாவது அபரமீதமான வெற்றியாக மேற்கிற்கு அமைய வேண்டுமென்பதில் ஆவலாக இருந்தனர். கலிப்பொலிக் குடாநாட்டின் தெற்கு முனையில் பெருந்தொகையான படையினர் தரையிறக்கப்பட்டனர். ஆகஸ்ட் 6ல் மிகப்பெரிய தாக்குதல் முயற்சியொன்றை பிரித்தானியர் சாபெற் மலைமேடு நோக்கி மேற்கொள்ளப்பட்டது. கலிப்பொலி குடாநாடெங்கணும் நேசபடைகளுக்கு நிச்சயமற்ற நிலையே தொடர்ந்தது.

பிரிட்டிஸ் படைகளின் புதிய அணிகள் காபாடெப்பே முனைக்கு வடபுறத்தேயுள்ள சவாலா குடாவில் இறக்கப்பட்டு உட்புகுந்து ஊடுருவித்தாக்குதலை நடத்தி நகரும்படி உத்தரவிடப்பட்டனர். ஆனால் தெளிவில்லாத வழிகாட்டலினால் மீண்டுமொரு மோசமான தோல்வியை நேசபடைகள் எதிர்கொண்டனர். தரையிறக்கப்பட்ட நேச நாடுகளின் படைவீரர்களும் கட்டளையதிகாரிகளும் இக்கட்டான நிலைகளுக்கு உள்ளாகினர். இது தற்காப்பு யுத்தம் நடாத்தி வந்த துருக்கியரை அழித்தொழிப்பு யுத்தம் நடாத்துவதற்கு ஏதுவாக சாதகமானதாக அமைந்தது. 1915 செப்டெம்பர் மாதமளவில் கலிப்பொலி குடாநாட்டில் தரையிறங்கிய நேச படையினர் மோசமான பின்னடைவுகளைச் சந்தித்தனர்.

இறுதியாக சேர். இயான் கமில்டன் இடத்திற்கு ஜெனரல் மொன்ரோ நியமிக்கப்பட்டார். அவர் நேசநாடுகளின் படையணிகளை கலிப்பொலி குடாநாட்டிலிருந்த பின்வாங்கும்படி உத்தரவிட்டார். தை ஒன்பதாம் திகதி 1916 ஆம் ஆண்டு நேசநாட்டுப்படைகள் முற்றாக கலிப்பொலியிலிருந்து பின்வாங்கினர். 1ம் உலகப்போர் முடியுமட்டும் டாட்டினெல்ஸ் நீரிணை கொன்ஸ்ரான்டினோபிளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. முதலாம் உலகப்போரில் வெற்றி பெற்ற நேசநாடுகளுக்கு கலிப்பொலிச் சமர் பெரும் பொருட்செலவையும் ஆட்சேதத்தையும் தந்தசமராக அமைந்தது. இது அவர்களின் படைநடவடிக்கையின் திட்டமிடலையே கேள்விக்குள்ளாக்கியது என்பதில் ஐயமில்லை.

இதிலிருந்து ஒரு பேருண்மை விளங்குகிறது, எவ்வளவு பெரிய படைவலுவாக இருந்தாலும், அதனை பல ஜெனரல்களும், அட்மிரல்களும் வழிநடாத்தி ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டாலும் தாய்நிலத்து மைந்தரை வெல்லுவது என்பது கடினம். ஏனெனில் தங்கள் மண்ணின் ஒவ்வொரு அசைவுகளையும் நன்கு அவதானித்து அதற்கேற்ப நடந்து கொள்வார்கள்.

இதனையே சீனப் போரியலறிஞரான சன்சூ இன்னோர் பாணியில் கூறினார். "எதிரி எண்ணிக்கையில் அதிக வலுவுள்ளவனாக வந்தால் உடனடியாக உனது படையணிகளைப் பின்வாங்கச் செய்து, எதிரிக்கு உனது பலம் பற்றிய மாயையை ஏற்படுத்தி, அதன் மூலம் அதிரடி ஊடுருவல் தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களை நிலை குலையச் செய்து பின்வாங்கச்செய் " ■




**ஆற்றுபவர்க்கும் அரண் பொருள் அஞ்சித்தற்**
**போற்று பவர்க்கும் பொருள் (குறள் 741)**

**படையெடுத்து வருவோருக்கு அஞ்சி அமைக்கப்படுவதுதான் அரண் என்பதல்ல. சிறப்பாய்ந்து பகைவரை அழிக்கும் வீரர்கள் தங்கவும். கூரிய ஆயுதங்களைத் தன்னகத்தே கொள்ளவும் அசையாத பெரும் பலமாய் அமைவதும் அரண்.**

# பேரினவாதத்தை வேரறுக்கும் ஓயாத அலைகள் 3 !

**சிங்களப் பேரினவாத அமைப்பின் பிரதான ஆக்கிரமிப்பு ஆயுதமான சிங்கள இராணுவம் யாழ்.குடாநாட்டில் பெரும் கட்டுமானச் சிதைவையும் – அழிவையும் எதிர்கொண்டுள்ளது. சிங்களப் பேரினவாத போர் யுக்திகளின் தவிர்க்க முடியாத மையமாகியுள்ள யாழ் குடாநாட்டில், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் திட்டமிட்டு நகர்த்திவரும் ஓயாத அலைகள் 3 போர்வியூகங்கள் முழு சிங்கள அமைப்பையும் ஆட்டம் காண வைத்துவருகின்றது.**

நோர்வே இணக்க முயற்சிகளுக்கு எதிரான சிங்களத்தின் வெறிக்குரல் கொழும்பில் மிக தீவிரமாக ஒலித்து வருகின்றது. நோர்வேயை புலிகளின் ஆதரவு நாடாக சிங்கள பௌத்த மதபீடங்கள் குற்றம் சாட்டுகின்றன. தனது மீன்பிடி நலனுக்காகவே நோர்வே அரசு இணக்க முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது என பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க வின் பிரதான வெளிவிவகாரத் தலைவர்கள் பகிரங்கமாக கூறுகின்றனர். நோர்வேயின் நல்லெண்ண முயற்சிகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை ஜே.வி.பி கொழும்பில் நடத்துகின்றது. சந்திரிகா தலைமையிலான ஆளும் கூட்டணிக் கட்சிகள் இணக்க முயற்சிகளை நிராகரிக்கும் போர் எத்தனங்களை துரிதப்படுத்தியதன் மூலம் தமது போர்வெறியையும், இனவெறியையும் பகிரங்கப்படுத்தியுள்ளனர்.

சிங்களப் பேரினவாதம் தனது அடிப்படை இனவெறிக் கோட்பாடுகளை எவ்வாறு இறுகப்பற்றியுள்ளது என்பதையும், சர்வதேச இணக்க முயற்சிகளை சிங்களப் பேரினவாதம் எவ்வாறு ஒட்டுமொத்தமாக நிராகரிக்கின்றது என்பதையும் இன்றைய கொழும்பு நிகழ்வுகள் ஆதாரபூர்வமாக ஆவணப்படுத்துகின்றன.

இப் பேரினவாத அமைப்புக்கள் தமது இராணுவ அமைப்பைச் சார்ந்த ஆக்கிரமிப்பு சிந்தனைகளை அண்மைக்காலங்களில் தீவிரப்படுத்தி வருகின்றன. சிங்கள நாட்டின் பிரதான பௌத்த பீடாதிபதிகளான நால்வரும் கூட்டாக விடுத்த அறிவிப்பில் போரை மூர்க்கமாக நடாத்தும்படி வேண்டுகோள் விடுத்து வருகின்றார்கள். போரை வெல்வதே சிறீலங்கா முன்னுள்ள ஒரே ஒரு தீர்வாகும் என இவர்கள் கூக்குரலிட்டுள்ளனர். இலங்கைத் தீவு எதிர்கொள்வது தமிழினப்

**நாதன்**

பயங்கரவாதம் என அவர்கள் கூறியுள்ளனர். இக் கருத்துக்களை வலுப்படுத்துமுகமாக, சிங்கள

> **“ஓயாத அலைகள் 3ன் இன்றைய கட்டம் யாழ்.குடாவை முழுமையாக மீட்கும் போது சிங்கள இராணுவ – அரசியல் சமநிலையில் பெரும் அதிர்வை அது ஏற்படுத்தும்.”**

அரசின் பிரதி வெளிவிவகார அமைச்சர் அண்மையில் இந்திய செய்தியாளர்களிடம் பேசுகையில் புலிகளுக்கான ஆயுத விநியோகமே சிங்கள இலங்கைத் தீவின் பிரச்சனை என்கின்றார். சிங்கள தகவல் ஊடகங்கள் தமிழர்களின் உரிமைப் போரை வெல்வதற்கான இராணுவத் தேவைகளை வலியுறுத்தி வருகின்றது.

இவ்வாறன புறநிலைகளில் ஓயாத அலைகள் 3 நடவடிக்கை மீள தீவிரம் பெற்றுள்ளது. வன்னிப் பிராந்தியத்தில் சிங்கள இராணுவ கட்டமைப்பை சிதைத்தழித்து தமிழீழ விடுதலைக்கான மற்றுமொரு வரலாற்றுப் பாய்ச்சலை மேற்கொண்ட ஓயாத அலைகள் நடவடிக்கை யாழ் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள ஆக்கிரமிப்பு இராணுவம் மீதான நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளமை சர்வதேச ஈர்ப்பைப் பெற்ற ஒரு அரசியல் - இராணுவ விடயமாகியுள்ளது.

நோர்வே இணக்க முயற்சிகளை வரவேற்று, அமைதிவழி இணக்க முயற்சிகளை வரவேற்ற தமிழர்களுக்கும், இணக்க முயற்சிகளை நிராகரித்து போர்வெறிக் குரல் எழுப்பும் சிங்களவர்களுக்கும் இடையேயான வலுவான இடைவெளியை உலகம் கிரகித்துக் கொண்டிருக்கையில் ஓயாத அலைகள் 3 நடவடிக்கை மீள தீவிரம்பெற்றுள்ளது. இவ்விடைப்பட்ட காலத்தில் சிங்கள அரசு போர்பற்றியே சிந்தித்தது. போரிற்கான பெரும் நிதி ஒதுக்கீட்டைப் புரிந்தது. 15000 சிங்களவர்களை படையில் சேர்ப்பதற்காக முழு அரச இயந்திரமும் பாவிக்கப்பட்டன. சிங்களப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் வேட்டையாடப்பட்டனர். தென்தமிழீழம் மீது பொருளாதார நெருக்குவாரம் ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டன.

சிங்கள அரசு இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் தமது ஆக்கிரமிப்புப் படைகளை ஆயுதரீதியாகவும், ஆட்பலத்தாலும் அதிகரிப்பதுடன் வன்னியில் இழக்கப்பட்ட மனோபலத்தை மீளப் பெற முயன்றது. ஓயாத அலைகள் 3ன் வன்னி வெற்றிகள் வெறுமனே அன்றைய வன்னிப் பிராந்தியத் தளபதியான மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா மற்றும் சில தளபதிகளின் பிழையான முடிவுகளால் இடம்பெற்றது என நிரூபிக்க சிங்களம் முயன்றது.

ஆனால், ஓயாத அலைகள் 3 மீள புதிய வடிவில் கடல்-தரை சமராக வெடித்தபோது சிங்கள இராணுவம் தன் மற்றுமொரு தவிர்க்க முடியாத எல்லையை நோக்கி தள்ளப்படுகின்றது. நான்கு பெரும் படைப்பிரிவுகளும் பிற துணைப் படைகளும் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட சிங்களத்தின் யாழ் படைப்பலம் புலிகளின் தரை - கடல் சமரினால் சுற்றிவளைக்கப்பட்டு முற்றுகை நிலைக்குள்ளும், சிதைவு நிலைக்கும் கொண்டு செல்லப் படுகையில் சிங்களப் பேரினவாதம் இத் தோல்விகளால் பெரும் தாக்கத்திற்குள்ளாகின்றது.

ஓயாத அலைகள் 3ன் இன்றைய கட்டம் யாழ்.குடாவை முழுமையாக மீட்கும் போது சிங்கள இராணுவ - அரசியல் சமநிலையில் பெரும் அதிர்வை அது ஏற்படுத்தும். சிங்கள அமைப்பினால் தமிழர்கள் மீதான போரில் சிங்களம் பெற்றுவரும் வெற்றியின் சின்னம் என போலியாக தூக்கிநிறுத்தப்பட்ட யாழ். ஆக்கிரமிப்பு புலிகளிடம் வாங்கும் ஒவ்வொரு அடியிலும் பேரினவாத அமைப்பு வேரறுபடும் வாய்ப்பைக் கொண்டுள்ளது.

போரை முன்னிலைப்படுத்தும் கோசங்களுடன் ஆட்சிக்கு வந்த சந்திரிகாவும், அவரது விருப்பத்திற்குரிய தளபதி லெப்.கேணல் வீரசூரியாவும் இவ்வாறு வேரறுபடும் பேரினவாதத்தின் இரு பிரதான தலைமைகளாகத் திகழ்கின்றனர். எப்போதும் சிங்கள இனவாதம் தோற்காது என நம்பும் பௌத்த பீடங்களும், பிற சிங்களத் தரப்பினரும்கூட தமது போர்முனைத் தோல்விகளுக்கும், இழப்புகளுக்கும் அத்தலைமையிடம் விளக்கம் கோரலாம்! ■

### ஒப்புதல் வாக்குமூலம்!

*...கடந்த 20 வருடங்களில் புலிகள் தாக்கிவிட்டு ஓடும் இராணுவமாக இருந்து மரபுவழி போர் ஆற்றலைப் பெற்றுள்ளனர். டாங்கிகள், பீரங்கிகள், மோட்டார்கள், பல வகை றொக்கட் ஏவுகணைகள், சொந்தமான கடற்படை, பயங்கரமான தற்கொடை தொழில் நுட்பம் மற்றும் மரபுவழி அரச இராணுவத்தை எதிர்கொண்டு முறியடிப்பதற்கு தேவைப்படும் பல்லாயிரம் பயிற்றப்பட்ட போராளிகளை ஒன்றுகுவிக்கும் திறன் கொண்டவர்கள்....*

–சிங்களக் கருத்துக்களை வெளியிடும் தி ஐலண்ட்டில் வெளிவந்தது–

## ஆட்சேர்ப்பும் ஆட்பிடிப்பும்

சிறீலங்காப்படைக்கு, புதிதாக படையினரைத் திரட்ட எடுத்த கடும் முயற்சி தோல்வியடைந்திருக்கின்றது. பதினையாயிரம் பேருக்கு வலைவிரிக்கப்பட்டபோதும், சொற்ப தொகையானோரே படையில் சேர்ந்திருக்கின்றனர். தேர்தல் காலப் பிரச்சார நடவடிக்கை போல, வீடுவீடாகச் சென்று, இராணுவ அதிகாரிகளே பிரச்சாரம் செய்திருக்கின்றனர். அரசாங்க அதிபர்கள், கிராம சேவகர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பௌத்த பிக்குகள் என, சமூகத்தில் மக்கள் தொடர்புடைய எல்லோரிடமும் இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு கோரப்பட்டிருந்தது. கவர்ச்சிகரமான விளம்பரங்களும் செய்யப்பட்டிருந்தன. யுத்தகளத்தின் உண்மை நிலவரங்களை, கிராமத்துச் சிங்கள மக்களும் தற்போது அறிகின்ற நிலையாதலால், சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர முன்வரவில்லை.

படையில் சேர்ந்து நாட்டைக்காக்க, உங்கள் பிள்ளைகளை அனுப்புங்கள், படையில் சேர அவர்களுக்கு ஊக்கம் கொடுங்கள் என, சிறீலங்காப் பாதுகாப்பமைச்சகம் அறிக்கைவிட்டபோதும்கூட பலன் தோல்விதான்.

இராணுவத்திற்கு ஆட்கள் சேரவில்லை என்பதால். தற்போது அதிரடிப்படைக்கு ஆட்களைத் திரட்டப் போகின்றார்களாம். பதினொராயிரம் பேருக்கு வலைவிரித்திருக்கின்றார்கள். மாட்டப்போவது எத்தனை நூறோ தெரியவில்லை.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால். மன்னாரில் தட்டிவைக்கப்பட்டதுதான். அதாவது விளம்பரத்தட்டி. தமிழ்மக்களையும், படையில் சேர்த்துக்கொண்டு விடுதலைப் புலிகளுடன் சண்டை செய்யப் போகின்றார்களாம். மன்னாரில், இராணுவப் பாஸ்பெறுகின்ற அலுவலக முன்றலில் வைக்கப்பட்ட இவ்விளம்பரத்தட்டியில்...

தமிழ் இளைஞர்களே! யுவதிகளே! படையினருடன் தோளோடு தோள் சேர்ந்து விடுதலைப் புலிகளுடன் போரிட முன்வாருங்கள் என எழுதப்பட்டிருந்தது.

பாஸ் பெறச் செல்லும் இளவயதினர் படையில் சேருமாறு நச்சரிக்கப்பட்டுமுள்ளனர்.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில், ஆட்சேர்ப்புக்கு இராணுவம் பத்திரிகை விளம்பரங்கூடச் செய்திருந்தது. வீரத் தமிழ் இளைஞர்களே! என விழித்து ஆரம்பமான அந்த விளம்பரத்துடன் ஒப்பிடும் போது, மன்னார் தட்டி அவ்வளவு பரவாயில்லை.




### மீள் பார்வை

“ஓயாத அலைகள்” 2 (1998-9) நடவடிக்கையின் போது கிளிநொச்சி மீட்கப்பட்ட வேளையில் ஈழநாடு (வன்னி) பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கருத்து சித்திரம் இது.

வெற்றிகளைச் சுமந்தபடி “ஓயாத அலைகள் 3” தொடரும் இக் காலத்தே பொருத்தம் கருதி இக் கருத்துச் சித்திரத்தை இங்கு பிரசுரிக்கின்றோம்.




# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

தலைமன்னார் கடற்பரப்பில் கடந்த 12-03-00 அன்று சிறீலங்காக் கடற்படையினருடன் எற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த கடற்புலிகளின் விபரம் வருமாறு.

**மேஜர். வருணன்**
**(மதனசாமி சந்திரகுமார்-அம்பாறை)**

**மேஜர். மதன்**
**(சிதம்பரநாதன் சுவாமிநாதன் திருகோணமலை)**

**கப்டன். தினேஸ்** அல்லது **சுரேந்திரன்**
**(வைரவநாதன் தயாபரன்-யாழ்ப்பாணம்)**

02-03-00 அன்று கொக்கிளாய் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த மாவீரர்

**வீரவேங்கை இசையமுதன்** அல்லது **குமரச்செல்வன்**
**(சீவரத்தினம் அன்பழகன் திருகோணமலை மாவட்டம்)**
தற்போதய முகவரி உடையார்கட்டு

10-03-00 அன்று அன்புவழிபுரம் சுற்றிவளைப்பில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரன்.

**கப்டன் அறிவு** அல்லது **அறிவன்**
**(பொன்னம்பலம் சிவக்குமார் - திருக்கோணமலை மாவட்டம்)**
த.மு 7ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு

17.03.2000 யாழ்.மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்

**மேஜர் மூத்தவன்**
**(கிருஸ்ணன் கிருபாகரன் - யாழ்.மாவட்டம்)**
த.மு ஒட்டகக்குளம் வவுனிக்குளம்

25.3.2000 அன்று இயக்கச்சிப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் பெண் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்

**வீரவேங்கை பிரியங்கா**
**(நடராசா சுபாசினி - யாழ்ப்பாணம்)**

இதேதினத்தில் மணலாறு பிரதேசத்தில் இடம்பெற்ற சிறீலங்காப் படைகளினுடனான மோதலில் வீரச்சாவடைந்த மாவீரர்கள்

**வீரவேங்கை அமுதன்**
**(ஆறுமுகம் ஜெயச்சந்திரன் - மட்டக்களப்பு)**

**வீரவேங்கை விஜயகார்த்திக்**
**(பாக்கியராசா உதயராஜ் - மட்டக்களப்பு)**

**துணைப்படை மேஜர் சின்னையா**
**(சுப்பிரமணியம் செல்வரட்ணம் கொக்குத்தொடுவாய்)**

ஒயாத அலைகள் - 3 தாயக மண்மீட்புச் சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரன்

**கப்டன் சங்கீதன்**
**(கேசவராசா ஆறுமுகநாதன்- கடற்கேணி கிழக்கு,முல்லைத்தீவு)**

இதே தினம் நுணாவில் பகுதியில் இடம்பெற்ற சிறீலங்கா இராணுவத்துடனான எதிர்பாராத மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரன்

**மேஜர் பூமகன்**
**(பழனி சின்னத்துரை அரவிந்தன்- யாழ் மாவட்டம்)**
த.மு 163 குடியிருப்பு வீதி விசுவமடு

தொடரும் ஒயாத அலைகள் மூன்று நடவடிக்கைகளில் வீரச்சாவடைந்தோர்

**வீரவேங்கை இசையழகன்**
**(சண்முகம் சந்திர குமார்- யாழ் மாவட்டம்)**
த.மு விமலன் குடியேற்றத்திட்டம். இராமநாதபுரம் கிளிநொச்சி

**வீரவேங்கை விசும்பன்**
**(நடராசா ரஜனிகாந்தன்- மட்டக்களப்பு மாவட்டம்)**

**வீரவேங்கை நிலவன்**
**(புஸ்பராசா சிவகுமார்- யாழ் மாவட்டம்)**
தற்போதய முகவரி தட்சணாமருதமடு மன்னார்

**வீரவேங்கை தங்கலச்சுமி**
**(மனோகரன் சுதர்சனா - யாழ் மாவட்டம்)**

**வீர வேங்கை இன்பன்**
**(பாலசுந்தரம் சுதாகரன் வவுனியா)**
த.மு சிவன்கோயிலடி நட்டாங்கண்டல்

**வீரவேங்கை வர்ணன்** அல்லது **கீதன்**
**சிறீகைலைநாதன் விமலன்- யாழ் மாவட்டம்)**
த.மு 1ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு

**வீரவேங்கை இசைப்பொழிலன்**
**(வில்வராசா உதயநாத் - யாழ் மாவட்டம்)**
த.மு 19.யோகபுரம மல்லாவி

**வீரவேங்கை சிதம்பரம்**
**(கைலைவாசன் ஜானகிராமன் யாழ் மாவட்டம்)**
த.மு முழங்காவில் மன்னார்



## பெரும் படையதனை வென்ற பெயர்

அன்னை பூபதி
ஆதிக்கத்தின் அடித்தளத்தை
அதிரவைத்த பெயர்
ஆயுதபலத்தாலே
எமையடிமை கொள்வதற்கு
அலைகடல் ஏறிவந்த
ஆதிக்கப் பேய்களை
இடியெனவே அடித்த பெயர்
அமைதிகாக்க என்று
சொல்லி
ஆள் அம்பு அணியுடனே
எம்போராட்டமதையழிக்க
எம் விடுதலைக்கு
குழிபறிக்க
வந்த இந்தியனை
அடிபணியவைத்த பெயர்
பாடும் மீனும்
பால்வார்க்கும் ஆநிரையும்
பசுமை காட்டி நிற்கும்
வயற்காலம் தோட்டமும்
வாய்த்து செழித்திருக்கும்
மட்டுநகர் மீதினிலே
பஞ்சமென்ற சொல்லினையே
கண்டிராத ஊரினிலே
மாதமொன்று பசிகிடந்து
மரணத்துள் வாழ்ந்திருந்து
வேசமிட்டு வந்தவரை
வீசிவிட்ட பெயர்
அன்னை பூபதி
ஆதிக்கத்தின் அடித்தளத்தை
அதிர வைத்த பெயர்
ஆமிவருகுதென்றால்
அழுங்குழந்தை வாயடங்கும்
ஆச்சிகை தாவணியை
தானாக இழுத்துவிடும்
இளைஞர் அவன் இதயங்கள்
துடிப்பதையே மறந்துவிடும்
மூச்சை உள்ளிழுத்து
மூதேவி வருகுதென்று
முணுமுணுத்து
மூன்று நொடியினிலே
வீட்டின் மூலையிலே
பதுங்கிவிடும்
காலமதில்..........
தீயை எரிக்கும் பெரும்
தீயாகி நிமிர்ந்து நின்று
தன்மூச்சதனை ஈழத்தின்
பேச்சிற்காய் உவந்தளித்த
தமிழ்த் தாயவளின் பெயரது

அன்னை பூபதி
ஆதிக்கத்தின அடித்தளத்தை
அதிரவைத்த பெயர்

பூவையாய் இருந்து பெரும்
புயலாகி எழுந்த பெயர்
இந்தியரின் வேசமதை
கலைத்திடவே எழுந்த பெயர்
அகவையது தடையில்லை
என்றே உரைத்த பெயர்
ஆயுதமின்றி நின்று
பெரும் படையதனை
வென்றபெயர்
அன்னை பூபதி
ஆதிக்கத்தின் அடித்தளத்தை
அதிரவைத்த பெயர்.

-அளவை வாசவன்-

### மிக முக்கியமான செய்தியை உலகுக்கு சொல்லப்போகும் ஐ.நா பேரணி

# இது எமது யுகம்

வருடந்தோறும் ஜெனிவாவிலுள்ள ஐ.நா சபையில் மனித உரிமைகள் குறித்து ஆணைக்குழு நடைபெறும். இந்த வருடம் இவ் ஆணைக்குழுக் கூட்டத்தொடர் மார்ச் 20ம் திகதியிலிருந்து ஆரம்பித்து ஏப்பிரல் 28ம் திகதி வரை நடக்கவுள்ளது. உலகின் தனிமனிதர்களின் இனங்களின் உரிமைகள் குறித்து அவற்றிற்கெதிரான மீறல்கள் குறித்தும் பிரஸ்தாபிப்பதற்கும், அது குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்கும் உலகின் பெரும்பாலான நாடுகளிலிருந்தும் அரசுகளின் பிரதிநிதிகளும், மனித உரிமைகள் குறித்து சர்வதேசரீதியாக செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளுகின்றனர்.

1983ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஆண்டு தோறும் இலங்கைத்தீவில் சிங்கள இனமக்களாலும் அவர்களின் அரசுகளாலும், அரச இராணுவத்தாலும் ஈழத் தமிழ்மக்களுக்கு எதிராக மீறப்பட்டு வந்த மனித உரிமைகள் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தது. தொடர்ச்சியாக இந்த சிங்கள அரசுகளின் மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டு புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் சிங்கள அடக்குமுறைக்கு எதிராகவும், தமது அடிப்படை உரிமைகளுக்காகவும் குரல் எழுப்புவதற்காகவும் ஆவணியில் நடைபெறும் மனித உரிமைகள் உப ஆணைக்குழுவின் கூட்டத்தொடரின் போது அணிதிரள்வர்.

இந்த உப ஆணைக்குழு மிக விரைவில் ஐ.நாவின் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து இடம்பெறாது நிற்பாட்டப்படவுள்ளது. இந்த வகையில் புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது அபிலாசைகளையும் எதிர்பார்ப்புகளையும் உலகநாடுகளுக்கு வெளிப்படுத்த மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டத்தொடரின் போது அணிதிரள வேண்டியது அவர்களது வரலாற்றுக் கடமையாகின்றது.

பலதடவைகள் சிங்கள அரசினதும், இராணுவத்தினதும் மனித உரிமை மீறல்களும், அடிப்படை உரிமை மீறல்களும் சுட்டிக்காட்டப்பட்டபோதிலும், சிங்கள அரசும், இராணுவமும் தொடர்ந்து வன்முறையை தமிழ் மக்கள் மீது நடத்தி வருகின்றனர்.

கைதுகள் பால் வேறுபாடின்றி தொடருகின்றன.

தடுப்பு முகாம்கள் சித்திரவதைகள் தொடருகின்றன.

சிறைகளில் தமிழ்க்கைதிகள் கொலை செய்யப்படுகின்றன.

வகைதொகையின்றி பொது இடங்களிளும் வீடுகளிளும் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர்.

ஈழத்தமிழ்மக்கள் ஆகிய நாம் தமது அபிலாசைகளையும் அடிப்படை உரிமைகளையும் நிலைநாட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்பதையும் அனைவரும் ஒருங்கிணைந்து உலகிற்கு தெரிவிக்கவேண்டியநிலையில் உள்ளோம்..

தமிழர்களும் சிங்களவர்களும் மொழியாலும், பண்பாட்டாலும், (மதத்தாலும்) நிலத்தாலும் இணைக்கப்படமுடியாத இரு பிரிவினர் இந் யுகத்தில் தான் அந்நிய ஆதிக்கத்திலிருந்து எம்மை நாம் விடுவிக்க போகிறோம்.

இது எமது யுகம் என்பதன் அர்த்தம் எம்மை நாமே ஆள்வதாகும். இதைத் தான் சுருக்கமாக உலகிற்கு தெரியப் படுத்த வேண்டிய கடமை எம்முடையது .







## மாபெரும் அமைதிப்பேரணி

நெதர்லாந்து
07-03-2000.

சிறீலங்காவில் தமிழ்மக்களுக்கு எதிராக சிங்கள அரச படையினரால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தியும், அரசியல் தஞ்சம்கோரி அது நிராகரிக்கப்பட்ட நிலையில், தமிழர்களை சிறீலங்காவிற்கு திருப்பி அனுப்ப வேண்டாம் எனக்கோரியும் நடத்தப்பட்ட பேரணி.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். சிறீலங்காப்படைகளின் கைகளில் சிக்கி, தமிழர்கள் அனுபவிக்கும் கொடுமைகளை எடுத்துவிளக்கும் விதமாய், பதாகைளையும், நிழல்படங்களையும் தாங்கி மக்கள் அணிவகுத்தனர்.

# முன்னைய தென்னாபிரிக்க நிறவெறிச் சட்டங்களை நினைவுபடுத்தும் தற்போதைய சிறீலங்காவின் இனவெறிச் சட்டங்கள்


-சுப்பு-

பதின்நான்கு பக்கங்களைக் கொண்ட கேள்விக்கொத்து. பூர்த்தி செய்யப்படவேண்டிய இருநூற்றி இருபத்தியிரண்டு கேள்விகள். இது, பரீட்சைக்குத் தோற்றும் பள்ளி மாணவன் சந்திக்கின்ற விடயமல்ல. சாதாரண தமிழ்பொதுமகன் ஒருவர், மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்குச் செல்லவேண்டுமாக இருந்தால், அவர் பூர்த்திசெய்யவேண்டிய கேள்விக்கொத்தும், கேள்விகளின் எண்ணிக்கையுமே இவை.

கொழும்பில் இடம்பெறும் குண்டுவெடிப்புக்களும், தாக்குதல்களும் மட்டக்களப்பில் இருந்து வரும் புலிகளாலேயே மேற்கொள்ளப்படுவதாக சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவு கண்டுபிடித்திருக்கின்றது. அதனாலேயே இந்த ஏற்பாடு எனச் சொல்லப்படுகின்றது. இந்த, 'பாஸ்' நடைமுறையை அமுல்படுத்தப்போவதாக அறிவிக்கும் சிங்களப்படைத் தலைமை இதனையே காரணமாகத் தெரிவிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில், வவுனியாவில், மன்னாரில், கொழும்பில் என, தமிழ் மக்கள் விதம் விதமான அடையாளங்களுடன் 'பாஸ்'களுடனுமே நடமாடவேண்டியவர்களாக வைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள யாழ்ப்பாணப் பகுதியில், விசேட அடையாள அட்டை, வவுனியா மன்னாரிலும் அதே நடைமுறை, கொழும்பில், விசேட பொலிஸ் பதிவுத்துண்டு, இவற்றை வைத்திருப்பதுடன், தமிழர்கள், தம்முடன் இராணுவ 'பாஸ்'களையும் வைத்திருக்கவேண்டியுள்ளது. ஒரு நாள் 'பாஸ்', இருநாள் 'பாஸ்', ஆறு மாதப் 'பாஸ்', நிரந்தப் 'பாஸ்' இப்படியாக தமிழர்கள் சிங்களத்தின் 'பாஸ்' இன் துணையுடனேயே நடமாடவேண்டியுள்ளது.

தமிழர்களை, நெருக்கடிக்குள்ளாக்கும், தொல்லைக்குள்ளாக்கும் நடைமுறைகள், சிங்களத்தின் பாதுகாப்பை உறுத்திப்படுத்தப்போவதில்லை. என்றபோதும், இந்த நடைமுறைகள் சிங்களப் படையதிகாரிகளுக்கும், சாதாரண படையினருக்கும் தமிழ் மக்களிடம் இருந்து, பெருந்தொகைப் பணத்தைக் கறக்க வசதியை ஏற்படுத்திக்கொடுக்கின்றது.

ஒவ்வொரு 'பாஸ்' களுக்கும், ஒவ்வொரு விலையை சிங்களப் படையினர் நிர்ணயிக்கின்றனர். இதனை பணம் உள்ளோர் யார் வேண்டுமானாலும், வாங்கிக் கொள்ளமுடியும் என்ற நிலையே உள்ளது. ஆக இந்த நடைமுறைகள், தமிழ்மக்களைத் தொல்லைப்படுத்தி அந்நியப்படுத்தவும், அவர்களிடமிருந்து பணம் கறக்கவுமே சிங்களப்படை அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தத் தடைகள் மூலம் கட்டுப்பாடுகள் மூலம் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தலாம் என்ற வாதம் வெறும் பிதற்றல். வெறும் பகிடி.

மட்டக்களப்பில் அமுல்படுத்தப்போவதாக அறிவிக்கப்பட்ட புதிய பாஸ் நடைமுறையின்படி, ஒரு தமிழீழப் பொதுமகன், இருநூற்றி இருபத்தியிரண்டு கேள்விகளைக் கொண்ட பதின்நான்கு பக்கக் கேள்விக்கொத்தை, விலை கொடுத்து வாங்கி, அதனைக் கவனமாக பூர்த்திசெய்து பயணம் செய்வதற்கு பதினைந்து நாட்களுக்கு முன்னர், படைஅதிகாரியின் பார்வைக்காகக் கையளிக்க வேண்டும். இதனை அலசி ஆராயும் படையதிகாரி, மனப்பட்டு அனுமதித்தால் மாத்திரமே, அப்பொதுமகன், கொழும்பு செல்ல முடியும். எவ்வளவு அவசியமான அவசரமான காரியமாக இருந்தாலும் இதுவே நடைமுறை.

சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவோ ஐக்கிய இலங்கை என்று அடிக்கடி குரலெழுப்புகின்றார். அதற்குள்ளேயே தீர்வென்றும் முழங்குகின்றார். ஆனால் நடைமுறையோ, வேறாகவுள்ளது. தமிழ்மக்களை அந்நியப்படுத்தி எட்டத்தில் வைப்பதையும், அவர்களை தொல்லைகளுக்கும் நெருக்கடிக்கும் உள்ளாக்குவதையுமே அவரது தமிழர்விரோதச் சட்டங்கள் செய்துவருகின்றன.

முன்னைய தென்னாபிரிக்க வெள்ளையின நிறவெறியரசின் மனித விரோத நிறவெறிச் சட்டங்களை மீள நினைவுபடுத்துமாப்போல், இங்கு இனவிரோதச் சட்டங்கள் இயற்றப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன.

தமிழர்களை இனம் காட்டுமாப்போல், புதிதாக அடையாள அட்டைகளை வழங்குமாறு, படைவட்டாரங்களிலும், அரசாங்க மட்டத்திலும் ஒரு சாரார் தொடர்ந்து அபிப்பிராயம் தெரிவித்துவருகின்றனர். தன்னை முழுமையாக வெளிக்காட்டிக் கொள்ளவிரும்பாத சந்திரிகா அரசோ அதற்குத்தயங்கிவந்தாலும், அதற்கு ஈடாக, தமிழர்களை இனங்காட்டும் வகையிலும் அவர்களை எட்டத்தே வைக்கும் விதத்திலும் தான் தோன்றித் தனமான இராணுவச் சட்டங்களை இயற்றியே வருகின்றது.

இலங்கையில் இருந்து சிங்கப்பூர் செல்ல ஒருவர் எத்தக் கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை. ஆனால், மட்டக்களப்பில் இருந்து கொழும்புவர இருநூற்றியிருபத்தியிரண்டு கேள்விகள் பூர்த்திசெய்யப்படவேண்டுமா? என்பது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் கேள்வி. அப்படியானால்... நாடு துண்டாகிவிட்டதா..? என்று துணைக்கேள்வியும் கேட்கின்றார் அவர். பதில் சொல்ல வேண்டியவர் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவே. ■

## பெண்ணிய வாதத்திலும் இனவேறுபாடுண்டா?



கொழும்பு கொம்பனித் தெருவில், தற்செயலாக நடந்துவிட்ட தவறால், சிங்களப் பெண்ணியவாதிகள் தற்போது கடும் கோபத்தில் இருக்கின்றனர். கடந்த பதினெட்டாம் திகதி, கொம்பனித் தெருவில் உள்ள, சிறீலங்கா விமானப்படையினரின் சோதனைச் சாவடியொன்றில் வைத்து, இளம் பெண் ஒருவர் உடை களையப்பட்டிருக்கின்றார். இது தான் பிரச்சினை. தமிழ்ப் பெண் எனவும், அதிலும் கரும்புலிப் பெண் எனவும் அச்சம் கொண்ட சிங்களக் கடற்படையினர், அவரை மறித்து அடையாள அட்டை கேட்டனர். அப்பெண், தான் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர் எனவும், தன்னிடம் அடையாள அட்டை இல்லை எனவும் சிங்களத்தில் தெரிவித்திருந்தார். கடற்படையினரின் சந்தேகம் மேலும் அதிகரித்துவிட்டது. அடித்துப்பதறி, பெண்ணை தூர விலகுமாறு கத்தியபடி கட்டளையிட்டனர். பயந்து நடுங்கிய அப்பெண், தூர விலகி நின்றார். உடைகளைக் களையுமாறு பயந்து கத்தினர் படையினர். சுற்றிவர மக்கள் பார்த்திருக்க வேறு வழியின்றி, அப்பெண் வீதியில் நின்றவாறு, தன் உடைகளைக் களைந்தார்.

அவர் கரும்புலிப் பெண்அல்ல என்பதும், அவர் உண்மையில் தமிழ்ப்பெண் அல்ல... சிங்களப்பெண் என்பதும் பின்னர் தெரியவந்தது.

உசாராகிவிட்டனர் சிங்களப் பெண்ணியவாதிகள். சந்திரிகாவிற்கு கண்டனக் கடிதம் பறந்தது. போராட்டம் செய்யப்போவதாக அச்சுறுத்தினர். விசாரணைகள் நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என வலியுறுத்தினர். தற்போது விசாரணைகள் நடைபெற்றுவருகின்றது.

இந் நடவடிக்கை மிகமோசமான செயல் என்பதில் சந்தேகமில்லை. ஒரு பெண்ணே ஆட்சி நடத்தும் சிறீலங்காவில் பெண்ணினம் மோசமாக நடத்தப்படுவது எத்துணை வெட்கக்கேடானது என, பெண்ணியவாதிகள் கொண்டுள்ள கோபத்திலும் அர்த்தம் உண்டு.

ஆனால்... இவர்கள் உண்மையில் பெண்ணினத்திற்காகக் குரல் எழுப்புபவர்களா? அல்லது சிங்களப் பெண்ணினத்திற்காக மட்டுமா? இதில் தான் பிரச்சினை.

பெற்றோருக்கு முன்னிலையிலும், கணவன் முன்னிலையிலும் கதறக்கதற சிங்களப்படையால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, கொல்லப்பட்ட தமிழ்ச் சகோதரிகளுக்காக இவர்கள் குரல்கொடுப்பதில்லையே. கொழும்பில், எத்தனை ஆயிரம் பெண்கள், கைதுசெய்யப்பட்டு, அடைத்து வைக்கப்படுகின்றனரே, கைக்குழந்தைகளுடனும், கணவன்மாருடனும் எத்தனை அப்பாவித் தமிழ்பெண்கள் கைதுசெய்யப்பட்டு வதைக்கப்படுகின்றனரே...

குரல்எழுப்பத்தான் ஆட்கள் இல்லை.
பெண்விடுதலைக்கான குரலிலும்
இனவாதவெடில்.

## மணிக் கவிதைகள்

### நாங்கள் எழுவோம்!

ஓ....இளைஞனே........!
ஏங்கி நிற்கும் உன்
எண்ணங்கள்?
எங்கே செல்கின்றன.
என் விதியை எவர் இப்படி
எழுதினார் என்றா...,?
அன்றேல்
எங்கும் என்வாழ்வுக்கு என்ன
விடை என்றா........
என் உறவை
என் இருப்பை
என் கல்வியை
என் வாழ்வை
எவன் அழித்தான்
என்றா......?
விதி எழுதும் எழுது கோல்
இனி
எங்கள் விதி
எங்களால் எழுதப்படட்டும்?

-கோகுலன்-

### அவர்கள் எனக்குத் தெரிந்தவர்கள்

இன்றுதான் இறுதிப் பயணம்
நாளை அது நடக்கும்
அந்த நகரத் தெருக்களில்
எப்பொழுதும் கமராக்களும்
கழுகுக்கண்களும்
எம் போன்றோரைத் தேடி
அலையும்
யார் வயிற்றில் கருவென்று
தெரியாமல் நாளை
என்னுடல்
சிதைந்து போகலாம்
எனக்குத் தெரியும்
எத்தனையோ
மனிதர்களின் உயிர்த்துடிப்பு
நின்று போவதற்கு
இவர்கள்தான் காரணமாக
இருந்தார்கள்
என் நெஞ்சில் நெருப்பு
நெருங்கிப் பகை எரிக்கும்
அவர்கள் எனக்குத்
தெரிந்தவர்கள்
என் வீட்டிற்கு அருகில்
இருப்பவர்கள்
ஒரு வினாடி கண்கள்
சந்தித்தன
நான் சுதாகரித்துக்
கொண்டேன் எனக்கு
இவைகள் பழக்கப்பட்டவை
அவர்கள்
என்னையே உற்றுப்பார்ப்பது
என்னுள்
எனது உணர்வலைகளூடே
தெரிந்தது
நாளை அது நடந்த பின்பு
சிதறப் போகும் என் உடல்
பாகங்கள்
உருத்தெரிந்தன என்றால்
அங்குள்ள அவர்களும்
பார்ப்பார்கள்
கருவறையில் சிதைந்து
போகாத
என்னுடல் வெடிகுண்டில்
சிதைந்ததை
அவர்கள் அம்மாவிடம்......

-தமிழ் மாறன்-

# அன்னையர் திலகம்




## பூபதி கணபதிப்பிள்ளை

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் தொழிலாளர்கள் ஒன்று கூடி, தொழிலாளர் வேலை செய்யும் நேரம் எட்டு மணித்தியாலங்களாகக் குறைக்கப்பட வேண்டும் என்று முதலாளிகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர். அதில் தொழிலாளர்கள் இரத்தம் சிந்தி , உயிர்த் தியாகம் செய்து கோரிக்கையை வென்றெடுத்த தினமே தொழிலாளர்தினமாக உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தொழிலாளர்களின் வேலை எட்டு மணித்தியாலங்களாகக் குறைக்கப்பட்டதோடு தொழிலாளர்கள் பிரச்சனைகள் தீர்ந்து விடவில்லை. சுரண்டும் வர்க்கம் வெவ்வேறு வழிகளில் தொழிலாளர்களைச் சுரண்டிக் கொண்டு இருக்கிறது.

சுரண்டலின் உச்சக்கட்டமாக ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக நாடுகளை மிகவும் கொடூரமான முறையில் பல வழிகளிலும் சுரண்டுவதுடன், அங்கே உள்ள தேசிய இனங்களிடையே திட்டமிட்ட ரீதியில் விரிசல்களை ஏற்படுத்தி தொழிலாளர்களிடையே பிரிவினையை வளர்த்திருக்கிறது.

இனவேறுபாடு, மொழிவேறுபாடு, மதவேறுபாடு, பிரதேசவேறுபாடு காரணமாக ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை ஒடுக்குவதற்கு மூல காரணமாக இருப்பதும் ஏகாதிபத்தியமே. இன்றைய மேதினம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒடுக்கப்பட்ட மக்களினது, தினமாகவே உலகமெங்கும் கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் ஒடுக்கப்படுகின்ற தமிழ்பேசும் மக்களுக்காக உயிர்த்தியாகம் செய்த அன்னையர் திலகம் பூபதி கணபத்திப்பிள்ளை அவர்களை நினைவு கூருதல் பொருத்தமானதாகும்.

சிறீலங்கா இனவாதஅரசால் ஒடுக்கப்படுகின்ற தமிழ்த்தேசிய இனத்தின் இறைமையைக் காப்போம், சுதந்திரத்தை நிலை நாட்டுவோம் என்று புறப்பட்ட இயக்கங்களில், தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர ஏனையவை சுவடு தெரியாமல் அழிந்து போயின. சில ஏகாதிபத்தியத்தால் விலைக்கு வாங்கப்பட்டுவிட்டன.

இந்நிலையில் பிரஜைகள்குழுக்கள் போன்ற மக்கள் ஸ்தாபனங்கள், இராணுவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை எதிர்த்துக் குரல் கொடுத்தன.

தொழிலாளர் சங்கங்களும், மாதர் சங்கங்களும், மாணவர் சங்கங்களும், இணைந்து அரசிற்கெதிரான உண்ணாவிரதப் போராட்டம். ஆர்ப்பாட்ட ஊர்வலம் போன்ற வெகுஜனப் போராட்டங்களை நடத்தினர்.

இச்சமயம் அன்னையர் முன்னணி, மிதவாத அரசியல் நிலையைக் கடைப்பிடிக்கும் ஒரு சுயாதீன அணியாக நின்று போராட்டங்களை நடாத்தியது.

இவ்வமைப்பு தமிழ்மக்களின் எல்லையில்லா நலன்கருதி எமது பிரச்சனை சம்பந்தமாக நிரந்தரமான தீர்வை, ஒரு புரட்சிகரமான தீர்வை முன்வைக்கவில்லை.

இவர்கள் முன்வைத்த நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை அரசு கடைப்பிடிக்க வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் அமைதித் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஒரு தற்காலிகமான அமைதியையும், நின்மதியையும் ஏற்படுத்தக் கூடியனவாகவே இருந்தன. தவிர நீண்ட காலப்போக்கில் தமிழ் மக்களின் சுதந்திரத்தையும் இறைமையையும் காக்கக் கூடியதாக இருக்கவில்லை. இருப்பினும், மட்டக்களப்பு அன்னையர்முன்னணி போன்றவை தமது போராட்டத்தில் தீவிரத் தன்மையைக் காட்டியது குறிப்பிடத்தக்கது.

> **சாதாரண குடும்ப உறவு, பாசவலைகள் அத்தனைக்கும் அப்பாற்பட்டு அனைத்துத் தமிழ்பேசும் மக்களினதும் மேல் கொண்ட நேசத்தினால் தன்னுயிரைத் தியாகம் செய்யத்தலைப்பட்டார்.**

1987 ஜூலை 29 இல் இந்தியாவும் இலங்கையும் ஒப்பந்தம் செய்து கொண்டபின், எம்மைச் சூழவிருந்த அரசியல் இராணுவ நிலைகளில் திடீரென ஒரு மாற்றம் ஏற்பட்டது.

இந்தியா தன்னை ஒரு சமாதானப் பிரியனாகக் காட்டிக் கொண்டு சதி செய்யப்புறப்பட்டு வந்தது. இந்தியாவின் இத்துரோகத் தனத்தைக் துகிலுரித்துக்காட்டும் அவசியம் எமக்கு ஏற்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் நாம் அகிம்சைப் போராட்டத்தை எமது ஆயுதமாக்கிக் கொண்டோம். இதில் முதலாவது சத்தியாக்கிரகியாகத் திலீபன் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

ஆகாரமோ நீரோ அருந்தாது தனது சாகும்வரை உண்ணாவிரதத்தை நல்லூர் முன்றலில் ஆரம்பித்தான். திலீபனைத் தொடர்ந்து திருகோணமலையில் கிருபாவும், மட்டக்களப்பில் மதனும், முல்லைத்தீவில் திருச்செல்வமும் விடுதலைப் புலிகளின் உண்ணாவிரத்தைத் தொடர்ந்தனர்.

மக்கள் புரட்சி வெடிக்கட்டும், மக்ளுக்காக மரணிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம் என்றான் வீர மரணத்தைத் தழுவிக்கொண்ட திலீபன்.

விடுதலைப் புலிகள் நடத்திய இந்தப் போராட்டம். இந்திய ஏகாதிபத்தியத்தாலும், சிறீலங்கா இனவாத்தினாலும் அடக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒவ்வொரு தமிழ்பேசும் மகனின் நெஞ்சிலும் விடுதலைத் தீயை மூட்டிவிட்டது.

மேற்கண்ட இந்திய இலங்கைக் கூட்டுச் சதியை எதிர்த்துப் பொதுமக்களும் பல இடங்களில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். ஆனால் இந்தியா அனைத்துத் தமிழ்பேசும் மக்களுக்கும் பாரிய துரோகம் இழைத்து விட்டது. உண்ணாவிரதமிருந்த திலீபன் சாக விடப்பட்டான்.

மீண்டும் ஆயுதப் போர் தவிர்க்கமுடியாததாகியது. அமைதிகாக்க வென்று காலடி எடுத்து வைத்த, இந்திய இராணுவம் கனிகளையும், காய்களையும் பிஞ்சுகளையும் கசக்கிப் போட்டது. ஆம்! ஏராளமான தமிழ் மக்களைக் கொன்று குவித்தது.

இந்நேரத்தில் தமிழ் பேசும் மக்களை, உயிராபத்திலிருந்து காப்பாற்றுவதற்காக நிரந்தர யுத்தநிறுத்தத்தை இந்திய அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்று சகல பொதுமக்கள் அமைப்புக்களும் ஒருமித்து கொடிபிடித்தன.

ஆனால் இந்திய அரசுக்கு அவையாவும், செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தது.

இந்திய அரசின் இந்தப் பிடிவாதப் போக்கை உறுதியாக எதிர் கொண்ட அன்னையர் முன்னணி, இந்திய அரசின் போக்கில் மாற்றத்தைக் கொண்டுவரத் தமது உயிரையே பணயம் வைக்கத் தலைப்பட்டது. இந்த வேளையில்தான், அன்னையர் திலகம் பூபதி கணபதிப்பிள்ளை அவர்கள், பல இலட்சக் கணக்கான தமிழ்பேசும் மக்களை, ஆதிக்க வெறியர்களின் துப்பாக்கிக் குண்டிலிருந்தும், பீரங்கிக் குண்டிலிருந்தும் காப்பதற்காகத் தன்னுயிரை அழித்துக் கொள்ள திடசங்கற்பம் பூண்டார்.

அன்னயைர் திலகம் 19-03-1988-ல் தனது பிறந்தஇடமான மட்டக்களப்பிலேயே தமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

மகிழ்ச்சியோடு உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கினார். சாதாரண குடும்ப உறவு, பாசவலைகள் அத்தனைக்கும் அப்பாற்பட்டு அனைத்துத் தமிழ்பேசும் மக்களினதும் மேல் கொண்ட நேசத்தினால் தன்னுயிரைத் தியாகம் செய்யத் தலைப்பட்டார்.

அன்னையின் வீரமும், உறுதியும் மிக்க போராட்டம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எழுச்சி அலையை ஏற்படுத்தியது. ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், அடையாள உண்ணாவிரதங்களும் ஆங்காங்கே நடைபெற்றன.(அந்நியரின் அச்சுறுத்தல் மத்தியிலும்)

இந்த நிலையில் அன்னையின் போராட்டம் உலகின் கண்களைத் திறந்து இந்திய அரசின் அமைதிகாப்புப்படலம், இங்கே எவ்வாறு நிகழ்கின்றது என்பதைப் புலப்படுத்திவிடும் என மிரண்ட இந்திய இராணுவம், அன்னையின் உறுதிதளராத போராட்டத்தை, இருட்டடிப்புச் செய்வதற்கும், குழப்புவதற்கும் பல வழிகளிலும் முயன்றது. ஆனால் நடக்கவில்லை. தனது கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டத்தைக் கைவிட அன்னை மறுத்து விட்டார்.

ஆனால் இந்தியஅரசின் போக்கில் மாற்றமில்லை. அன்னையின் போராட்டம் தொடங்கி முப்பது நாட்களில் அவரின் உயிர் கொஞ்சம் கொஞ்சமாக இந்திய அரசின் மமதைக்கு இரையாகியது.

ஐம்பது வருட கால விடுதலைப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகப் போராடி உயிர்த்தியாகம் செய்த வீரம் செறிந்த குடும்பப் பெண்ணாவார் அன்னையர் திலகம்.

உலகிலேயே உண்ணாவிரதமிருந்து வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட முதற் பெண்மணியும் இவரே.

அன்னையின் விடுதலை வேட்கையும், தியாகமும் தமிழீழ விடுதலைக்கான மக்கள் போராட்டத்தில் என்றுமில்லாத எழுச்சி நிலையை உலகிற்குக் காட்டி நிற்கிறது.

அன்னையின் தியாகவேள்வி முடிவடைந்து இப்போது 12ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டது. தன்னுடைய உன்னத தியாகத்தால் தமிழ் பேசும் மக்களின் நெஞ்சங்களில் நிலைத்துவிட்ட அன்னை அவர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். ■




சிறீலங்கா அரசபடையினரால் தமிழ்ப் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை வெளிப்படுத்தி, கனடாவில் தமிழ்ப் பெண்கள் நடத்திய ஊர்வலம். அனைத்துலகப் பெண்கள் நாளில், திரண்டெழுந்த பலநூறு தமிழ்ப்பெண்கள், தமிழீழத் தாயகத்தில் இருந்து சிங்கள ஆக்கிரமிப்புப்படை வெளியேறவேண்டும் எனக் குரலெழுப்பினர்.

# அலைகள் ஓய்வதில்லை



**இது தமிழீழத்தில் வெளியான சிறுகதை. சிங்கள ஆக்கிரமிப்புப் படையின் பிடியில் சிக்குண்டு தவிக்கும் குடாநாட்டில் இருந்து வெளிவந்த கதை என்பது இரட்டிப்பான தாக்கத்தைத் தருகின்றது. இது கற்பனைக் கதையா? உண்மைக்கதையா? இனம்பிரித்து அறியமுடியவில்லை. உணர்வுகளின், உறவுகளின் பின்னலாகி, கதை இதயத்தை நெருடுகின்றது. கண்களை ஈரப்படுத்துகின்றது.**

அண்ணா எழுதியிருந்த கடிதத்தை மீண்டுமொரு முறை வாசித்தேன்.

*அன்புடன் தம்பிக்கு !*

*நான் முன்புபோல இங்கிடம் வரமுடியாது. அப்படிவரச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் உங்கிடம் வந்து நிம்மதியாகத் தங்கியிருப்பது சாத்தியமில்லை. நீ கவனமாகப்படி. அம்மா அப்பாவைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உன்னிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருப்பதை நீ அறிவாய். எனவே நீ வேறு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டாம். மேலும் அம்மாவிற்கு இக்கடிதத்தைக் காட்ட வேண்டாம். அவ அழுது கொண்டிருப்பா. அப்பாவின் புகையிலைத் தோட்டம் இந்த முறை நல்ல பயனைத் தரும் என நினைக்கிறேன். அசோகன் இறந்ததுதான் எனக்குத் தாங்கமுடியாமற் போய்விட்டது. அவனுடைய செத்தவீட்டைக்கூட கொண்டாட முடியாத பரிதாபநிலையை அறிந்து உள்ளம் வெதும் பினேன். மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்தால் மடல் வரைவேன். ஆனால் அதுவும் நிச்சயம் இல்லை. இந்தக் கடிதம்கூட மாறனின் முதுகில் வைத்தே எழுதுகிறேன். எனக்கு இப்போது அம்மாவின் கையால் சோறும் கறியும் சாப்பிட வேண்டும்போல் இருக்கிறது. பெரியண்ணாவிற்கு அந்த ஆசை நிறைவேறியது. ஆனால் எனக்கு?! நீ எதற்கும் கலங்காதே! நேரம் கிடைக்கும்போது பெரியண்ணாவின் டயறியை வாசி.*

*இப்படிக்கு*
*இளையண்ணா*
*சுதாங்கன்*

இந்தக் கடிதத்தை அம்மாவிடம் காட்டுவதா? வேண்டாமா? என என் உள்ளத்தில் ஒரு போராட்டம் நடந்து கொண்டிருந்தது. ஏற்கனவே இரத்த அழுத்தத்தால் நிறையப் பாதிக்கப்பட்டிருக்கும் அம்மாவிற்கு எந்த ஓர் அதிர்ச்சியான செய்தியும் தெரிவிக்கக்கூடாது என மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள். இந்த நிலையில் இந்தக் கடிதத்தைக் காட்டுவது சாதகமாக இருக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. இதனால் அண்ணாவின் கடிதத்தை அம்மாவிற்குக் காட்டாமல் அப்பாவிற்குக் காட்டுவதென முடிவெடுத்தேன். கடிதத்தை அப்பாவிற்குக் காட்டுவதற்குத் தோட்டம் சரியான இடம். வீட்டில் அம்மாவில் இருந்து அப்பாவைத் தனிமைப்படுத்துவதற்கான சாத்தியம் மிக மிகக் குறைவு.

நான் தோட்டத்திற்குப் போனபோது அப்பா கிணற்றடிப் பூவரசின் நிழலில் இருந்து, சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார். புகையிலைக்கன்றுகள் காற்றின் உதவியுடன் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருந்தன. ஐப்பசி மாதத்தில்கூட பங்குனி வெய்யில் தகித்தது. காலநிலைகூட எங்களுக்கு எதிராகத்தானே இருக்கிறது. யாரோ களைபிடுங்கும் இருவர் பேசிக் கொண்டிருந்தது தெளிவாய்க் கேட்டது.

என் காலடி ஓசை கேட்டுத் திரும்பிய அப்பா. என்னை நிதானமாகப் பார்த்தார். அவர் முகத்தில் உணர்ச்சி என்பது வறண்டிருந்தது. அப்பா அமர்ந்திருந்த சூழலில் பெரும் நிசப்தம் நிலவியது. அதைக் கலைக்க வேண்டிய தேவை அப்போது எனக்கு ஏற்பட்டது.

"அப்பா! அண்ணா கடிதம் அனுப்பியிருக்கிறார்." என்றேன் அக்கடிதத்தை அவரிடம் நீட்டியவாறே. அந்த நேரத்தில் அவர் கண்களில் ஒரு பிரகாசத்தை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆர்வத்துடன் அந்தக் கடிதத்தை வாங்கி வாசிக்கத் தொடங்கினார்.

கடிதத்தை வாசித்து முடித்த அப்பாவின் கண்கள் கலங்கியிருந்தன. "கொம்மாவுக்கு இப்ப இதைப்பற்றி ஒண்டும் சொல்ல வேண்டாம்" என்றபடி கடிதத்தை மடித்து இடுப்பில் செருகிக் கொண்டார். அந்த இடத்தில் மீண்டும் அமைதி நிலவுகிறது. அந்த அமைதியைக் கலைக்க விரும்பாதவனாய் நான் திரும்பி வீடு நோக்கி நடந்தேன்.

என்ன சுதாங்கன் யோசிக்கிறாய்? நண்பன் செவ்வேளின் குரல் கேட்டு சுயநினைவுக்கு வந்தான் சுதாங்கன்.

கடைசி நேரம் அம்மா, அப்பாவின் முகத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கேல்ல மச்சான் என்றான். குரலில் நிறையச் சோகம் கலந்திருந்தது. சுதாங்கனின் பதில் செவ்வேளை நிறையப் பாதித்திருந்தது. அவன் அந்த இரவின் கருவானத்தை வெறித்தபடியே சொன்னான்.

உனக்கு மட்டுமல்ல எங்களில் அநேகம் பேருக்கு கடைசி நேரத்தில் இப்படி ஒரு ஆதங்கம் ஏற்படத்தான் செய்யுது. அதுக்காக வீணாய் மனதைக் குழப்பிக் கொண்டிருந்தால் எங்கடை இலக்கை அணுகிறதில தடங்கல் ஏற்பட்டாலும் ஏற்படும். செவ்வேளின் வார்த்தைகளைத் தொடர்ந்து அந்த இடத்தில் நிசப்தம் நிலவியது. சுதாங்கன் கைக்கடிகாரத்தில் நேரம் பார்த்தான். அது இரவு பத்து முப்பது என மௌனமாகப் பேசிக் கொண்டிருந்தது.

நாளைக்கு இந்நேரம் நாங்கள் பிறந்ததுக்கும், வளர்ந்ததுக்கும் வாழ்ந்ததுக்கும் ஓர் அர்த்தம் கற்பிக்கப்பட்டிருக்கும் என்று சொன்ன சுதாங்கனின் குரலில் ஒருவிதமான உறுதி கலந்திருந்தது. ஆனால் அந்தக் குரலில் பயமோ, விரக்தியோ, நிச்சயமாகக் கலந்திருக்கவில்லை. செவ்வேள் சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு நிதானமாகப் பேச ஆரம்பித்தான்.

மச்சான்! கடல் எங்களுக்கு அம்மா மாதிரி. அது எங்கட குடும்பத்தின்ர வறுமையை நீக்கின தெய்வம். எனக்கு இப்பவும் ஞாபகமிருக்குது. இரவு பத்துப் பதினொரு மணிக்குத்தான் அப்பா கடலுக்குப் போவார். அப்பா மட்டுமில்ல எங்கட ஊரில கடற்தொழில் செய்யிற ஆக்கள் எல்லாம் அந்த நேரத்திலதான் கடலுக்குப் போவினம். அதுவும் நடுக்கடலுக்கு. திரும்பிவர பன்னிரண்டு ஒரு மணியாகும். அப்பர் கடலால வந்த உடனும் வீட்டில ஒரு இனம்புரியாத சந்தோசம். நெத்தலி மீன் புட்டு, விரால் மீன் குழம்பு, கும்பிளா மீன் குழம்பு, முரல் மீன் வறுவல் எண்டு விதவிதமான சாப்பாடு. அந்தச் சந்தோசமான வாழ்கை அப்பாவும் அண்ணாவும் கடலோட சங்கமமானதோட சிதைஞ்சு சின்னாபின்னமாப் போச்சு......... சிறிது நேரம் தனது உணர்வுகளை வார்த்தைகளாக்குவதை நிறுத்தி பெருமூச்செறிந்தான் செவ்வேள். பின்னர் ஆவேசம் வந்தவன் போல் கூறினான்.

இவங்கள் ஆர் மச்சான் எங்கட கடலில சுதந்திரமா மீன் பிடிக்கிறதைக் கட்டுப்படுத்த? திரும்பவும் சுதந்திரமும் நிம்மதியும் நிறைஞ்ச ஒரு வாழ்வைப் பெற்றுக்கொடுத்து எங்கட மக்களை வாழவைக்க எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைச்சதுக்காக நிறையச் சந்தோசப்படுறன் மச்சான்...........நிறையச் சந்தோசப்படுறன்.

உன்னப் போலத்தான் மச்சான் நானும் நிறையச் சந்தோசப்படுறன் என்ற சுதாங்கனின் குரலிலும் ஒருவித நிம்மதியை உணரமுடிந்தது.

இளையண்ணாவின் கடிதத்தை வாசித்த பிறகு என்னால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை.



அவருடைய முடிவு நிச்சயிக்கப்பட்டுவிட்டதை தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிந்தாலும் அது எப்போது நிகழும் என்பதை மட்டும் அறிந்து கொள்ள முடியாதிருந்தமையினால் என்மனம் துடித்துக் கொண்டிருந்தது. பெரியண்ணாவும் இப்படித்தான் ஒரு நாள் எதிர்பாராத விதமாக வீட்டுக்கு வந்தார்.

நான் ஒரு கிழமைக்கு இஞ்சதான் நிக்கப்போறன். அவர் இவ்விதம் சொன்னதும் அம்மா அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

"ஏன் தம்பி லீவோ?" அப்பா கேட்டார்."

"ஓமப்பா லீவு மாதிரித்தான்" பெரியண்ணாவின் பதிலில் ஏதோ ஒன்று மறைந்திருந்தது.

> **"திரும்பவும் சுதந்திரமும் நிம்மதியும் நிறைஞ்ச ஒரு வாழ்வைப் பெற்றுக்கொடுத்து எங்கட மக்களை வாழவைக்க எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைச்சதுக்காக நிறையச் சந்தோசப்படுறன்"**

"டேய் ஆனந்தன் இஞ்சவா" பெரியண்ணா என்னை பாசத்தோடு அழைத்தார். எனக்கு அவரது தோற்றத்தைப் பார்க்கப் பயமாக இருந்தது. நிறையத் தாடி வளர்த்திருந்தார். கண்கள் சிவந்து போயிருந்தன.

"இப்ப எந்த வகுப்புப் படிக்கிறாய்?" எனத் தலையைத் தடவிய படி கேட்டார்.

"நாலாம் வகுப்புப் படிக்கிறன்" என் பதிலில் பயம் கலந்திருந்தது.

"இந்த முறை நீ எத்தனையாம் பிள்ளை?" அவர் ஆர்வத்துடன் கேட்ட மாதிரி எனக்குத் தோன்றிற்று.

"முதலாம் பிள்ளை" நான் கொஞ்சம் பெருமைப்பட்டு பதிலளித்தேன்.

"கெட்டிக்காரன். இப்படி ஒவ்வொரு முறையும் வரவேணும் என்ன?" அவருடைய பாராட்டுதலும் வேண்டுதலும் என்னை உற்சாகப் படுத்திற்று. நான் "சரி" எனத் தலையசைத்தேன். எனக்கு இப்போது பெரியண்ணாவுடன் கதைக்கத் துணிவுவந்தது. நெடு நேரமாக என்மனதில் எழுந்த சந்தேகமொன்றைக் கேள்வியாக்கினேன்.

"பெரியண்ணா! நீங்கள் அந்த உரப்பைக்குள் என்ன சாமான் வைச்சிருக்கிறியள்?'

எனது கேள்விக்குப் பதிலாக அவர் புன்னகை ஒன்றை உதிர்த்தார். சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு சொன்னார்.

"அதுக்குள்ள இருக்கிற சாமான்தான் எங்கட உரிமையளைப் பெற்றுத் தருகிற கருவி. விளங்கிச்சுதோ?" நானும் அதை விளங்கிக் கொண்டவன் போலத் தலையாட்டினேன். ஆனால் எனக்கு அப்போது ஒன்றுமே விளங்கவில்லை. நான் பெரியண்ணாவைப் பார்த்து இன்னுமொரு கேள்வி கேட்டேன்.

"அண்ணா? நீங்கள் ஏன் இப்படி எங்கள விட்டுட்டு வேற இடம் போன நீங்கள்? நீங்கள் போன நாள் தொடக்கம் அம்மா அழுது கொண்டல்லோ இருக்கிறா?"

என் கேள்விக்கு பெரியண்ணாவிடமிருந்து பெருமூச்சொன்று வெளிப்பட்டது. பின்னர் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு "உனக்குச் சித்திரா அக்காவைத் தெரியுமல்லோ என்று கேட்டார்?"

அவர் அந்தக் கேள்வியைக் கேட்டதும் சித்திரா அக்கா என் நினைவுத் திரையில் தோன்றினாள். அழகான கண்கள் சீரான சின்ன மூக்கு திரண்ட பளபளப்பான கன்னம், ரோசாப் பூவை நினைவுபடுத்தும் உதடுகள். இவையாவற்றினதும் தொகுப்பான அவளின் வட்ட முகம் என் மனக்கண்ணில் மின்னலடித்து மறைந்தது. சித்திரா அக்கா முன்பெல்லாம் அடிக்கடி வீட்டிற்கு வருவாள். பெரியண்ணாவுடன் தனியாக இருந்து சிரித்துக் கதைப்பாள். அம்மாவும், அப்பாவும் கூட ஒருநாள் அவர்கள் இருவரையும் சேர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டு, நல்ல சோடிப் பொருத்தம் என்று சொன்னதும் ஞாபகம் இருக்கிறது. அவள் இறந்துபோன அன்றிலிருந்து சில நாட்கள் பெரியண்ணா சாப்பிடாமல் இருந்ததும் ஞாபகம் இருக்கிறது.

ஆனால் சித்திராக்கா எப்படி இறந்து போனாள் என்பது மட்டும் அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

"என்னடா யோசிக்கிறாய்? உனக்கு சித்திரா அக்காவைத் தெரியாதோ?" பெரியண்ணா திரும்பவும் இவ்வாறு கேட்டபோது தான் நான் நினைவுகளில் இருந்து விடுபட்டேன்.

"தெரியும் நல்லாத் தெரியும்" நான் பதிலளித்தேன்.

"அவாவை சிங்கங்கள் கடிச்சுச் சாகடிச்சுப் போட்டுது. அந்தச் சாக்காட்டின சிங்கங்களை வேட்டையாடத்தான் நான் இப்படி உங்களை எல்லாம் விட்டுட்டு காட்டுக்குப்போனனான்." பெரியண்ணாவின் பதில் எனக்குத் திருப்தி அளிப்பதைப் போலத் தோன்றிற்று.

"டேய் வெளியால போய் விளையாடு பாப்பம். பெரிய மனிசன் மாதிரி கேள்வி கேட்டுக் கொண்டு" இளையண்ணா என்னை அதட்டினார்.

"அவனைக் கலைக்காதை. அவன் நிக்கட்டும்." பெரியண்ணா அன்பான குரலில் இளையண்ணாவிற்கு சொன்னார். ஆனால் நான் அங்கே தொடர்ந்தும் நிற்காமல் வெளியில் விளையாடப் போய்விட்டேன்."

"அம்மா, உன்ர கையால கொஞ்சம் சோறு குழைச்சுத் தீத்திவிடுறியே. இதுதானே நான் இங்க தங்கி நிக்கிற கடைசி இரவு." பெரியண்ணா தான் திரும்பிப் போவதற்கு முதல் நள்ளிரவு அம்மாவை இவ்வாறு கேட்டார்.

"அப்பு நாளைக்கு உண்மையாப் போப்போறியே?" என்று கேட்ட அம்மா சிறிது நேரம் மௌனமாக அழுதாள். பின்பு பெரியண்ணா கேட்டபடியே சோறு குழைத்து ஊட்டிவிட்டாள். அதன் பின்னர் சிறிது நேரம், அம்மாவின் மடியில் அவர் படுத்திருந்தார். அவர் அவ்விதம் படுத்திருந்ததைப் பார்க்க அப்போது எனக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. ஆனால் இப்போது அதை நினைத்துப் பார்க்கும்போது ஓர் இனம் புரியாத வேதனை தொண்டையை

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

## அன்புச் சகோதரமே...

### வணக்கம்!

விட்ட இடத்தில் இருந்து தொடர்வதுபோல் மீண்டும் வேகம் பிடித்து சிங்களத்தின் ஆக்கிரமிப்பு மைய இருக்கையின் உயிர்நிலையின் மீது ஓங்கியறைய ஆரம்பித்திருக்கின்றது ஓயாத அலைகள் மூன்று.

தமிழீழத்தின் குரல்வளையில் குந்தியிருந்தபடி, வலியும் வேதனையும் தந்தபடி உறுத்திக்கொண்டிருக்கும் சிங்களத்தின் ஆனையிறவுப் பெருந்தளத்தை, அகற்றிவிடும் குறியுடன் ஓயாத அலைகள் மூன்று வேகம் பிடித்திருக்கின்றது.

இது நாட்டில் நடைபெறும் விடுதலைக்கான செயற்பாடு.

வரலாற்றில் அரிய பக்கங்கள் எழுதப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தமிழன் முன்னெப்போதும் அறிந்திருப்பானா...? எழுத்திலும் பேச்சிலும் கதைகளிலும் மாத்திரமே காணப்பட்ட தமிழனின் வீரம் இப்போது... கண்ணுக்கு நேரே நமது காலத்தில்.

தமிழரின் வீரவரலாற்றையும் விடுதலை அற்புதத்தையும் படைக்கும் தலைவரின் காலத்தில் வாழ்கின்றோம் என்பதே எத்தனை பெருமைக்குரியது.

இது விடுதலைக்கான காலம்.

கல்லும் முள்ளும் குத்திக் கிழிக்க, எதிர்ப்படும் தடைகளை விரைந்து கடந்து, துன்பச் சிலுவையை சுமந்தபடி விடுதலைக் கனிபறிக்க விரைகின்ற காலம்.

இத்தனை துயரங்கள் துன்பங்களைச் சுமந்தபடி, எமது மக்கள் போரா- டிவருகின்றனர். சாவையும் வேதனையையும் சதா சந்தித்தபடி சளைக்காது போராடிவருகின்றனர். விடுதலை கிடைக்கும் என்ற அசையாத நம்பிக்கையுடன் அவர்கள் நடத்தும் போராட்டம் இன்று வெற்றியின் வாயிலில் நிற்கின்றது.

அப்படியானால்...

எமது மக்களின் எமது மண்ணின் போராட்டத்திற்கு நாம் என்ன செய்தோம்.

அற்புதம் விளைகின்ற இக்காலத்தில் பிறந்தோம் வாழ்கின்றோம் என்றபோதும், இந்தப் பெருமிதத்தில் பங்குகொள்ள நாம் என்ன செய்கின்றோம்.

எங்கிருந்தாலும் எமக்குண்டான பணி பொதுவானது. விடுதலைக்காய் உயர்ந்தெழும் கரங்களைப் பலப்படுத்துவதும், எமது மக்களின் விடுதலைக்கான குரலை உலகெங்கும் ஓங்கி உரைப்பதும். நமது தலையாய பணி.

ஆர்ப்பரிப்புடன், ஆன்ம தாகத்துடன் இடைவிடாது கரைதொடும் ஓயாத அலைகள் போல... உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கும் வரை... சத்தியம் வெல்லும் வரை... விடுதலை வானம் சிவக்கும் வரை... உலகத்தமிழரின் போராட்ட அலைகள் ஓயுமா..?

ஐ.நா. நோக்கிய தமிழர் பேரணியில் இடம்பிடித்துக்கொள்.

அலைகள் ஓயாது!

அன்புடன்..
ஆசிரியர்.




### தமிழீழத் தேசியக்கொடி

தமிழீழத் தேசியக்கொடியின் பயன்பாட்டு விதிமுறைகள் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையால் வெளியிடப்பட்ட தேசியக்கொடி பயன்பாட்டு விதிக்கோவை என்ற சிறுகைநூலில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை, பகுதி பகுதியாக, இங்கு பிரசுரிக்கின்றோம்.

## தேசியக்கொடி

***தேசியக்கொடியின் தன்மை***

ஒரு நாட்டின் தேசிய இனங்கள், நாட்டு மக்களின் பண்புகள், ஆட்சி, இறைமை என்பவை உட்பட அந்த நாட்டைக் குறிக்கின்ற ஒட்டுமொத்தமான பொதுச் சின்ன மாகத் தேசியக்கொடி விளங்குகின்றது.

***தேசியக்கொடியின் அமைப்பும், அளவும்–***

ஒவ்வொரு நாட்டினதும் இயல்புகள், நிலைமைகள் எண் ணங்களின் வெளிப்பாடாக அந்தந்த நாடுகளின் தேசியக் கொடியின் சின்னம், நிறம், அளவு, அமைப்பு என்பன வேறு பட்டிருக்கும். தேசியக்கொடிகளின் அளவு பெரும்பாலும் 3–2 என்ற கூறுபாடு (விகிதம்) கொண்டதாக நீள, அகலங்கள் அமைகின்றன. சில நாடுகளின் தேசியக்கொடிகளின் நீள, அகலங்கள் 2–1 அளவாகவும், இன்னும் சில நாடுகளில் 1–1 என்ற அளவைக் கொண்டனவாகவும் (சதுரமாகவும்) அமை கின்றன.

***தேசியக்கொடியின் பெருமையும் கொடி வணக்கமும்–***

நாட்டைப் போற்றி வணங்குவதற்கீடாகத் தேசியக்கொடி வணக்கம் செலுத்தப்படுகிறது. தேசியக்கொடியை வணங் குவது, நாட்டை வணங்குவது போலாகும். நாட்டின் தலை வர், படை, ஆட்சி என்பவற்றை விடவும் தேசியக்கொடி மதிக்கப்படுகின்றது. எனவேதான் எந்தவொரு நாட்டிலும் எந்தச் சிறப்பு நிகழ்வுகளின் போதும் நாட்டின் தலைவர், படை, அரசுப்பணியாளர், குடிமக்கள் அனைவரும் கொடி வணக்கம் செய்கின்றனர்.

*(தேசியக்கொடியிலுள்ள புலி கொடிக்கம்பத்தைப் பார்த்தவாறு பறக்க விடப்படக்கூடாது. புலியின் பார்வை கொடிக்கம்பத்துக்கு எதிர்ப்புறமாக, கொடிபறக்கும் பக்கமாக இருக்கும் வகையில் கொடி பறக்கவிடப் படவேண்டும்.)*

10ம் பக்கத் தொடர்ச்சி

## அலைகள் ஓய்வதில்லை

அடைக்கும். அன்றுதான் பெரியண்ணாவைக் கடைசியாகப் பார்த்தேன். அதன்பின் தொடர்ந்து வந்த சில நாட்களில் அவர் காற்றோடு கலந்த செய்தி மட்டுமே கிடைத்தது.

அந்தத் தகவல் அம்மாவுக்குத் தெரிந்ததும் மயக்கமுற்று வீழ்ந்தாள். அதன்பின் ஆறேழு நாட்கள் அவள் நிலை கவலைக்கிடமாக இருந்தது. அந்த நாட்களில், குழாய் மூலமான குளுக்கோஸ்தான் அவளது உணவாக இருந்தது. பின்னர் படிப்படியாகத் தேறிவிட்டிருந்தாள்.

பெரியண்ணாவின் சம்பவத்திற்குப் பிறகு சிலகாலம் சாதாரணமாகவே கழிந்தது. தமிழன் வாழ்வில் அசாதாரண சம்பவங்கள் நிறையவே நிகழ வேண்டுமென விதியிருக்கும்போது, நாங்கள் மட்டும் என்ன அதற்கு விதிவிலக்கா?! அன்றொருநாள் புயல் வேகத்தில் வந்த குண்டு வீச்சு விமானங்கள் சாவகச்சேரி சந்தைப்பகுதியைச் சுற்றி வட்டமிட்டு தமது சுமைகளை கவலையில்லாமல் கண்மூடித்தனமாக இறக்கிவிட்டுப் போனதில் பலர் சதைத் துண்டங்களாகச் சிதறிப் போயிருந்தனர். இதைப் பார்த்துவிட்டு வந்ததிலிருந்து இளையண்ணா சாப்பிடவில்லை. எதையும் விரக்தியாகப் பார்த்தபடியிருந்தார்.

"தம்பி, சாப்பிட வாவன்" அம்மாவின் அழைப்பிற்கு எந்தப்பதிலும் தராமல் கற்சிலை போல இருப்பார். சில நேரங்களில் அம்மாவின் அழைப்பிற்கு, "எனக்குப் பசிக்கேல்ல" என்ற உணர்ச்சிகளற்ற குரலில் பதில்வரும். சாப்பிடும் நேரங்களில்கூட யோசித்துக் கொண்டிருப்பார். இந்த நிலை சில நாட்கள் நீடித்தது. திடீரென ஒருநாள் இளையண்ணா காணாமல் போனார். பெரியண்ணாவின் மறைவினால் ஏற்பட்ட வேதனைகளையும் சேர்த்து வைத்திருந்த அம்மா கதறி அழுது களைத்துப் போனாள்.

சிறிது நாட்களின் பின்னர் இளையண்ணாவிடமிருந்து ஒரு குறிப்புக் காகிதம் வந்திருந்தது. நான் நலமாயுள்ளேன். என்னை நினைத்து யாரும் கலங்க வேண்டாம். — சிலன்.

இந்தச் சிறு குறிப்பு அம்மாவின் வேதனைகளைக் குறைப்பதற்கு உதவியாக இருந்தது. தொடர்ந்து வந்த நாட்களில் அவரிடமிருந்து அவ்வப்போது கிடைக்கப்பெற்ற பெருமடல்களும், சிறுமடல்களும் அம்மாவின் துயரத்தைப் படிப்படியாகக் குறையச் செய்திருந்தன. ஐந்தாறு தடவைகள் அண்ணாவும் வீட்டிற்கு வந்து போனார். இதன் பிறகு அம்மா துயர மனைத்தையும் மறந்து இயல்பு நிலைக்கு திரும்பியிருந்தாள். தொண்ணூற்றைந்தில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்வதற்கு முன்னர் அண்ணா வீட்டிற்கு வந்துபோனார். அதன்பின் வரவேயில்லை. இடையிடையே கடிதங்கள் வரும். தொடர்ந்து வந்த நாட்களில் கடிதங்கள் வரவும் வெகுவாகக் குறைந்து போய்விட்டன.

இப்போது கிடைத்திருக்கும் கடிதம்தான் அனேகமாக அவரது இறுதிக்கடிதம் என நினைக்கிறேன். இனி ஒருபோதும் இளையண்ணாவைக் காணமுடியாது என்பதை என்னால் நன்றாக உணர்ந்து கொள்ள முடிகிறது. என்னால் எனக்கு எந்த ஆறுதலும் கூற முடியவில்லை. சொல்ல முடியாத வேதனை மனத்தைச் சிதைத்துக் கொண்டிருக்கிறது. கண்கள் என்னையறியாமலே ஈரமாகிவிட்டிருந்தன. ஒரே வயிற்றில் பிறந்தே இத்தகையநிலை என்றால் அந்த வயிற்றில் அண்ணாவைச் சுமந்த அம்மாவின் நிலை எவ்விதம் இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது. அம்மா இனிவரும் நாட்களில் கிடைக்கப்போகும் செய்தியை எவ்விதம் தாங்கிக் கொள்ளப் போகிறாள்? அதுவும் கதறியழக்கூட அனுமதிக்கப்படாத இந்தச் சூழ்நிலையில், நான் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தேன். படிப்பதற்குக்கூட மனம் இடம் தரவில்லை. எங்கேனும் வெகுதொலைவில் வெடியோசை ஏதாவது கேட்கிறதா எனக் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டேயிருந்தேன்.

பெரியண்ணாவின் டயறியை வாசிக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அந்த எண்ணத்தைச் செயற்படுத்த சில மணித்தியாலங்களைச் செலவழிக்க வேண்டியிருந்தது. அதற்குப் பெயர்தான் டயறியே தவிர அதன் பக்கங்கள் எல்லாம் கவிதைகள் மாத்திரம் நிரம்பியிருந்தன. முதற்பக்கத்தை விரித்தேன்.

உலகிலுள்ள மனிதன் எவனையும் கவிஞராக்கிவிடக்கூடிய விஷயங்கள் இரண்டு. ஒன்று காதல். இன்னொன்று உரிமைப் போராட்டம் என் எழுதப்பட்டிருந்தது. டயறியின் கடைசிப்பக்கத்தைப் பார்க்கவேண்டும் என ஒரு உந்துதல் எழுந்தது. கடைசிப்பக்கத்தைப் புரட்டினேன்.

நேற்று என் நண்பன்
இன்று நான்
நாளை என் சகோதரன்
இவ்விதம் தொடர்ந்து கொண்டே இருக்கும்
அலைகள் ஓய்வதில்லை.

முத்தான எழுத்துக்களில் ஓர் உணர்ச்சிமிக்க புதுக்கவிதை. நான் அந்த டயறியை மேலும் புரட்டிக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு தூரத்தில் ஒரு வெடியோசை எழுந்து மறைந்தது. என் இதயம் அசாதாரண நிலையில் துடித்துக் கொண்டிருந்தது. நான் அந்த டயறியை மூடிவைத்துவிட்டு கண்களை மூடி இறைவனை வேண்டினேன். இறைவா!, இனிவரும் நாட்களில் அறியப்படவிருக்கும் துக்கச் செய்தியைத் தாங்கிக் கொள்ளக் கூடிய மனஉறுதியை என் தாய்க்கு வழங்கி அவளை ஆறுதல்ப்படுத்து. ■

# ஒரு கைதியின் காதலிக்கு



கண்ணில்நீரோடு
காத்திருப்பவளுக்கு,
நேற்று முன்தினம் நள்ளிரவு
நித்திரையில் வைத்துக் கைதானேன்
காரணம் மட்டும் கேட்டுவிடாதே -அது
கடவுளுக்குக் கூடத் தெரியாது
வருடக் கணக்காக
விசாரணைகள் ஏதுமின்றி
வதைபடும் தமிழர்களில் இப்போது
நானும் ஒருவன்!

முதல்நாள் விசாரணையின் போது - என்
பற்கள் பல கழன்று விட்டதையும்
விலா எலும்புகள் சில
நொருங்கி விட்டதையும் இன்னும்
பற்பல அவலங்கள் சுமப்பதையும்
நீ ஒரு பொழுதும் அறிய வேண்டாம்
காணாமற் போனோரின் சங்கத்தில் இணைந்து
உண்ணா நோன்பும் இருக்க வேண்டாம்
உனக்கான உயிரை
இக்கணம் வரை சுமந்துள்ளேன்!
என்னைவிட மோசமான நிலையில்
இன்னும் பலர் இங்குளர்!
என் வேதனைகளின் நடுவே
உன் நினைப்பு ஒன்றுதான் குளிர்விக்கிறது
என் நிலை எண்ணி நீ
மனம் உடைந்து போயிருப்பாய்
படபடவெனச் சிறகடிக்கும் உன் விழிகள்
பாலைவனமாகியிருக்கும்
சிறையின் துன்புறுத்தல்களையும் விட
உன் நிலையுணரவைக்கும் நினைவுகளே
சுட்டெரிக்கின்றன!
இன்னுமொருதரம் படுகொலை ஏதும்
நடைபெறாவிடில் நிச்சயம்
நிச்சயம் நான் மீண்டும் வருவேன்!

மீளும் பொழுதில் புதிய
மனிதனாய் வருவேன்!
இரும்புச் சப்பாத்தின் கீழே
தினமும் நசிபடுவதை
என் முதுகு மட்டுமல்ல.
எம்மினத்தின் உரிமையும் தான்?
ஒரு வேளை-
நாளையோ..... மறுநாளோ
இல்லை- இன்னொரு நாளோ.....
மற்று மொரு
-விசாரணையின்- போது
என்னுயிர் பிரியலாம்!
அப்படியாயின்-
அழுது கொண்டிராதே-
எனதும் ...... என்னவர்களினதும்
இலக்கை எட்டுவதற்கு
உன் சிறகுகளை விரித்தெழு !

- ஆதிலட்சுமி சிவகுமார் -



சிறப்பெலாம் தொலைந்து ஓலைக்குடிலுக்குள்
குஞ்சுகளோடு சிறைப்பட்டது வாழ்வு...

இருளாய் இருப்போமா..? ஒளியைத் தருவோம்!

## இது எமது யுகம்! ஐ.நா நோக்கிய தமிழர் பேரணி

7 ←